உ

## குருஸ்ரீமால்மருகன் துணை

# 1. 4Dஅதிர்ஷ்ட எண்கள்

வணக்கம்..........

'4Dஅதிர்ஷ்ட எண்கள்' புத்தகத்தின் மூலம் புதுமுக அன்பர்களை தொடர்பு கொள்வதிலும், நட்பாளர்களின் தொடர்பை புதுப்பித்துக் கொள்வதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்.

'அதிர்ஷ்டம்' என்ற சொல்லுக்கு பலராலும், பல்வேறு காலகட்டங்களிலும், பல்வேறு அனுபவங்களால், பலவகையான பொருள் காணப்பட்டிருக்கிறது.

'அதிர்ஷ்டம்' என்றால். அது தானாக இஷ்டப்பட்டு ஒருவரைச் சேர்ந்து அடைவது அதிர்ஷ்டம் என்று சிலர் பொருள் கண்டுள்ளனர்.

என்னதான் விடாமுயற்சி, உழைப்பு, தகுதி என்றிருந்தாலும் அதிர்ஷ்டம் இருந்தால்தான் முன்னேற முடியும்.... தொடர்ந்து முன்னேற முடியும், முதல்நிலை வகிக்க முடியும்... முதல்நிலையை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று சிலர் அதிர்ஷ்டத்தை வலிமைப்படுத்துகின்றனர்.

திறமையுடன் அதிர்ஷ்டமும் இருந்தால்தான் குறிப்பிட்ட தகுதி நிலையை அடையமுடியும் என்று சிலர் வாதாடுவதுமுண்டு.

அவனு(ளு)க்கு கொஞ்சங்கூட தகுதி, திறமை கிடையாது, அவன்(ள்) நேரமப்பா, அதிர்ஷ்டமப்பா, இந்த அளவுக்கு முன்னேறி இருப்பது என்று சிலர் அதிர்ஷ்டத்திற்கு செயல்விளக்கம் தருவதும் உண்டு.

அயராத தொடர் உழைப்பின் மூலம் தக்கவைத்து கொள்ளும் முன்னேற்றத்தைக் கூட சிலர் 'அதிர்ஷ்டம்' என்கிறார்கள்.

தனக்கும் அதிர்ஷ்டம் வரும் என்று சிலர் உழைக்காமல், முயற்சிகள் செய்யாமல் சோம்பேறியாக சுற்றித்திரிந்து செல்லாக்காசாகி, எடுபிடியாளாகிப் போனவர்களும் உண்டு.

நாளை அதிர்ஷ்டம் உண்டாகும், அடுத்தவாரம் அதிர்ஷ்டம் வந்துவிடும் அடுத்தமாதம் நாம்தான் அதிர்ஷ்டசாலி, அடுத்தவருடம் நமக்குத்தான் அதிர்ஷ்டம் என்று சொல்லிக்கொண்டு, அதிர்ஷ்டத்தின்மேல் நம்பிக்கைவைத்து, நிகழ்காலத்தில் தன்னம்பிக்கையிழந்து தன்னிலைத்தாழ்ந்தவர்களும் ஏராளம்.

அதிர்ஷ்டம் வரும் என்று நாம் வெட்டித்தனமாகக் காத்துக்கொண்டிருக்கக்கூடாது. நாம் நமது வழியில் செயல்பட்டு கொண்டிருக்க வேண்டும். நமது செயல்பாடுகளின் இடையே, அதிர்ஷ்டம் நம்மைத் தேடிவந்து தட்டிகொடுத்து,

தாங்கிப்பிடித்து பொருளாதார ஏணியில் ஏற்றிவிட்டு புகழின் உச்சத்தில் உட்காரவைத்து அழகு பார்த்துவிட்டுச் செல்லும்.

அதிர்ஷ்டம், எவர் ஒருவரிடமும் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்காது. யார், யார் உழைத்துக் கொண்டிருக்கிறார்களோ? முன்னேறத் துடித்துக்கொண்டிருக்கிறார்களோ? செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ? அதிர்ஷ்டம் வரும் வழியை ஆராய்ந்து அதிர்ஷ்டக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு…. அதிர்ஷ்ட தேவதையை வரவேற்கத் தயார் நிலையில் காத்துக் கொண்டிருக்கிறார்களோ? அவர்களைதான் அதிர்ஷ்டம் தானாக தேடிவரும்; அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழவைக்கும்.

“அதிர்ஷ்டம்'' என்பதை நமது பாரம்பரியம் மிக்க பண்பாட்டில் பெண்ணியமாக்கி “அதிர்ஷ்ட தேவதை'' என்று அழைத்து வருகிறோம். அதனால்தான் அதிர்ஷ்டத்தை ‘அதிர்ஷ்ட தேவதை’ என்று வர்ணிக்கிறேன்.

அதிர்ஷ்ட தேவதை நம்மைத் தேடி வரமாட்டாளா? அதிர்ஷ்ட தேவதை கண்திறந்து பார்க்கமாட்டாளா? என்றெல்லாம் நமது சொல்வழக்குகளில்… வழக்காறுகளில் காணமுடிகிறது.

நமக்கு அதிர்ஷ்டம் வராதா? நாமும் அதிர்ஷ்டத்தை அனுபவிக்க மாட்டோமா? என்று, அதிர்ஷ்டசாலியாக வேண்டும் என்ற ஆசை யாரைத்தான் விட்டு வைத்தது.

படிக்காத பாமர மக்கள் முதல் மெத்தப்படித்த அறிவாளிகள் வரையிலும்,

அன்பு, நட்பு, பற்று, ஆசாபாசாங்களை பகிர்ந்து கொண்டு வாழ்பவர்கள் முதல் முற்றும் துறந்த முனிவர்கள் நிலையில் வாழ்பவர்கள் வரையிலும்,

உழைத்து வாழும் வாழ்க்கையே தலைசிறந்த வாழ்க்கை என்பன போன்ற கம்யூனிச கொள்கைக்கோட்பாடுகள் உள்ளவர்களும்,

தன்னம்பிக்கைக் கருத்துகளை பின்பற்றி வாழ்பவர்கள் முதல் மூட நம்பிக்கைகளில் மூழ்கித் திளைப்பவர்கள் வரையிலும்,

அதிர்ஷ்ட தேவதை என்னும் கடவுளே இல்லை;

அதிர்ஷ்ட தேவதையின் சுய விருப்பப்படி ஒருவருக்கு கிடைக்கும் அதிர்ஷ்டம் என்பதெல்லாம் பொய்யென்று நாத்திகம் பேசுபவர்களும்,

சாதி, சமய, மத, இன, மொழி, அடிப்படையில் தமது சமூக பழக்கவழக்கங்களில் சூதாட்டங்களின் வகையைச் சேர்ந்த அதிர்ஷ்ட விளையாட்டை நம்பக்கூடாது, கடைபிடிக்கக் கூடாது, பின்பற்ற கூடாது அத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடக்கூடாது என கொள்கைகள், கோட்பாடுகள் வகுக்கப் பட்டிருந்தாலும் அவைகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு,

அதிர்ஷ்டத்தை நம்பி, அதிர்ஷ்டத்தை அனுபவிக்க வேண்டிய செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களை நாம் அன்றாடம் காண்கிறோம்.

இப்படியாக எல்லாத் தரப்பினரையும் ஈர்த்து கொண்டிருக்கும் அதிர்ஷ்டத்தின் செயல்வடிவத்தைத் தான். “கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்து கொண்டு கொடுக்கிறது'' என்று சொல்வதுண்டு.

“ஒருவரின் வாழ்க்கையில் குறைந்தபட்சம் ஒருமுறையாவது அதிர்ஷ்டம் கதவை தட்டும்'' என்ற, அதிர்ஷ்டம் சம்பந்தமான அனுபவ மொழி நம்மையும் அதிர்ஷ்டத்தை அனுபவிக்கத் தூண்டுகிறது.

மேலும், நாமும் இன்றோ...... நாளையோ என்றோ ஒருநாள் அதிர்ஷ்டசாலியாக ஆவோம் என்ற நம்பிக்கையையும் விதைக்கிறது.

எனவே, அதிர்ஷ்ட தேவதை கதவைத் தட்டுகிற அளவிற்கு, நாம் கதவை சாத்திவைத்திருக்க வேண்டாம்; கதவை திறந்தே வைத்திருப்போம்; அதிர்ஷ்ட தேவதையை வரவேற்கக் காத்திருப்போம்.

அப்போதுதான் அதிர்ஷ்ட தேவதை வெகுவிரைவில் நம்மைத் தேடி வருவாள்; நம் பொருளாதார தேவையைப் பூர்த்தி செய்வாள்; பொருளாதார தன்னிறைவு வாழ்வு வாழ வைப்பாள்.

## 2. 4Dஅதிர்ஷ்ட விளையாட்டு

உலக அளவில் அதிர்ஷ்ட போட்டிகள் பல வகைகளில் பின்பற்றப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் ‘4Dஅதிர்ஷ்ட விளையாட்டு' ஆகும். திறமைகளை நிரூபிக்க விளையாடும் விளையாட்டு என்பது வேறு; அதிர்ஷ்டத்தை வரவேற்க விளையாடும் வியைாட்டு என்பது வேறு. இதில் ‘4D அதிர்ஷ்ட விளையாட்டு' என்பது அதிர்ஷ்டத்தை வரவேற்க விளையாடும் விளையாட்டு வகையைச் சேர்ந்ததாகும்.

எந்த ஒரு விளையாட்டிலும் பங்குபெற்றால் தானே வெற்றியை அல்லது தோல்வியைப் பெறமுடியும்; பங்குபெறாமலேயே வெற்றியை அல்லது தோல்வியை அடைய முடியாதல்லவா? பங்குபெற்றால் தானே வெற்றியைக் கொண்டாடுகிறோமா? தோல்வியில் துவழ்கிறோமா? என்பதை அனுபவிக்க முடியும்.

மற்ற விளையாட்டுகளில் பங்குபெறுவதற்கு திறமைகள் இருந்தால் போதும். ஆனால், 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்குபெறுவதற்கே அதிர்ஷ்டம் இருக்க வேண்டும்.

4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கு பெறுவது என்பது நாம் அதிர்ஷ்டத்தை வரவேற்கக் கதவுகளைத் திறந்து வைத்திருப்பதற்குச் சமமாகும். அதன் பிறகு அதிஷ்டம் என்பது, அது தானாக இஷ்டப்பட்டு நம்மைத் தேடி வருவதும்; வராமல் போவதும் அது இஷ்டம் ஆகும்.

ஆனால், நாம் நமது இஷ்டப்படி அதிர்ஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமானால் 4D முதலான அதிர்ஷ்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு அதிர்ஷ்டம் இன்று உண்டாகுமா? நாளை உண்டாகுமா? என்று காத்து கொண்டிருப்பதுதான் நமது கடமை ஆகிறது.

"ஒருவரின் வாழ்நாளில் குறைந்தபட்சம் ஒருமுறையாவது அதிர்ஷ்டம் அவரைத் தேடிவரும்" என்பது அதிர்ஷ்ட அனுபவ மொழியாகும். இந்த அனுபவ மொழியை நம்பித்தான் நாம் அதிர்ஷ்டம் வரும் வழிகளைத் திறந்தே வைத்திருக்க வேண்டும்.

## 3. 4D-ல் ஜோதிடம்

ஒருவரின் வாழ்க்கையில் நடந்த, நடக்கிற, நடக்கப் போகும் நிகழ்ச்சிகளையெல்லாம் முன்னரே அறிவிக்கும் ஜோதிடக் கலையில் 'அதிர்ஷ்டம்' பற்றியும் அறிந்துகொள்ள முடியும்.

ஒருவரின் வாழ்நாளில் எந்த காலகட்டத்தில், எவ்வாறு அதிர்ஷ்டம் உண்டாகும் என்பதை சரியான பிறப்புக் குறிப்புகளுடன் கூடிய ஜாதகமாக இருந்து, பலாபலன் கணிக்கக்கூடிய ஜோதிடரும் திறமையானவராக இருந்தால் திட்டவட்டமாக அறியமுடியும். பொதுவான அதிர்ஷ்ட வாய்ப்புகள் சம்பந்தபட்ட கணிப்புகள் சாத்தியமாகும்.

ஆனால் 4Dஅதிர்ஷ்ட விளையாட்டு சம்பந்தபட்ட வகையில் நான் உட்பட எப்பேற்பட்ட ஜோதிடரின் கணிப்பும் கூட பொய்த்துப் போகும். ஒருமுறை அல்லது ஓரிருமுறை ஜோதிட கணிப்பு பலிக்குமேயன்றி ஒவ்வொருமுறையும் ஜோதிடரின் கணிப்பு பலிக்காது.

ஏனெனில், ஜாதகத்தில் உள்ள கோள்களின் எண்மதிப்புக்கும், 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் உள்ள எண்களுக்கும் உள்ள வேறுபாடு; வித்தியாசம்தான் காரணமாகும்.

ஜாதகத்தில்,

சூரியன் கிரகத்தின் பலா பலன்களை 1 (ஒன்று) எனும் எண் தருவதாகவும்,

சந்திரன் கிரகத்தின் பலா பலன்களை 2 (இரண்டு) எனும் எண் வழங்குவதாகவும்,

செவ்வாய் கிரகத்தின் பலா பலன்களை 9 (ஒன்பது) எனும் எண் கொடுப்பதாகவும்,

புதன் கிரகத்தின் பலா பலன்களை 5 (ஐந்து) எனும் எண் தருவதாகவும்,

குரு கிரகத்தின் பலா பலன்களை 3 (மூன்று) எனும் எண் வழங்குவதாகவும்,

சுக்கிரன் கிரகத்தின் பலா பலன்களை 6 (ஆறு) எனும் எண் கொடுப்பதாகவும்,

சனி கிரகத்தின் பலா பலன்களை 8 (எட்டு) எனும் எண் தருவதாகவும்,

இராகு கிரகத்தின் பலா பலன்களை 4 (நான்கு) எனும் எண் பிரதிபலிப்பதாகவும்,

கேது கிரகத்தின் பலா பலன்களை 7 (ஏழு) எனும் எண் வழங்குவதாகவும் கணிக்கப்பட்டிருக்கிறது.

இதில், 1 (ஒன்று) முதல் - 9 (ஒன்பது) எண்கள் வரை மொத்தம் 9 (ஒன்பது) எண்கள் உள்ளன.

ஆனால் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் சுழியம் (0) முதல் ஒன்பது (9) வரை மொத்தம் பத்து (10) எண்கள் உள்ளன.

சுழியத்தைக் கணக்கில் எடுத்து கொள்ளாமல் ஜாதக கிரகங்களுக்குரிய எண்களை மட்டும் கணக்கில் எடுத்து கொண்டு 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க எண்களை தேர்ந்தெடுப்பது முழுமையான… சரியான தேர்வாகாது.

சுழியத்தைத் தவிர்த்து நாம் எண்களை தொடர்ந்து எழுதவே முடியாது. மற்ற எண்களைப் போலவே, ஏன்? மற்ற எண்களின் முக்கியத்துவத்தை விடவும் கூடுதலான முக்கியத்துவம் பெற்று 'சுழியம் (0)' என்ற எண் விளங்குகிறது.

எண் தொடர் வரிசையில் கூட, சீர்திருத்தப்பட்ட 'முழு எண் தொடர் வரிசையில்' முதல் எண்ணாக வருவதே 'சுழியம் (0)' என்ற எண் தான். மேலும் தொடர் எண் வரிசையில் மற்ற எண்களின் மதிப்பையே மாற்றும் அளவிற்கு சுழியம் (0) என்ற எண் முக்கியத்துவம் பெறுகிறது.

அப்படிப்பட்ட சுழியத்தை (0) விட்டுவிட்டு ஜாதகக் கிரகங்களுக்குரிய எண்களை மட்டும் கணக்கிட்டு 4D அதிர்ஷ்ட விளையாட்டில் வெற்றியடையச் சாத்தியமில்லை.

## 4. 4D-ல் எண் கணிதம்

எண்களை வைத்துத் தானே 4D அதிர்ஷ்ட விளையாட்டு நடத்தபடுகிறது என்று, எண் கணிதத்தைப் பயன்படுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பலரும் ஈடுபடுகின்றனர். இதில் சிலர் வெற்றி பெறுகின்றனர்; பலர் தோல்வி மேல் தோல்வி கண்டு பண இழப்புகளைச் சந்தித்து எண்கணிதக்கலையையேக் குறை கூறுகின்றனர்.

ஒவ்வொரு தனி நபருக்கும் எண் கணிதக் கலை முன்னேற்றத்தை தரக் கூடியதாகவே இருக்கிறது. ஆனால் அனைத்து தரப்பினரும் கலந்து கொள்ளக் கூடிய பொதுவான 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கும் போது எண்கணிதக் கலையின் கணிப்பு வேலை செய்யாது.

ஏனெனில், நம்மைப் போலவே எண் கணிதக் கலையைப் பயன்படுத்தி பலரும் 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பது நமக்குத் தெரிந்ததே. இதில் எண் கணிதக் கலையின் கணிப்பு யாருக்குத்தான் வேலை செய்யும். யாருக்கோ ஒருவருக்கோ, ஓரிருவருக்கோ, ஒருசிலருக்கோதான் அதிர்ஷ்டமாக அமையும். மற்றவர்களுக்கெல்லாம் பண இழப்புகளாகவே அமையும்.

ஜோதிட கிரகங்களுக்குரிய எண்களின் மூலம் அதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்று ஒவ்வொருமுறையும் அதிர்ஷ்டத்தை பெறுவதென்பது எவ்வாறு சாத்தியம் இல்லையோ, அவ்வாறே எண்கணிதக் கலையிலும் சாத்தியமாகாது.

எண்கணிதத்தில் எண்களை கூட்டல் முறையில் நான்கிலக்க எண்ணாக்கி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கின்றனர்.

எண்கணித கூட்டல் முறையில் சுழியம்(0) எனும் எண்ணை தவிர்த்து விட்டுத்தான் எண்கணிதக் கணிப்பைப் பயன்படுத்துகினறனர். உதாரணமாக ஒருவரின் பிறந்த தேதி 04.11.1977 என்றிருந்தால் பிறந்ததேதியை 04 என கணக்கில் எடுத்து கொள்ளாமல் சுழியத்தை (0)த் தவிர்த்து விட்டு 4 என மட்டும் பலர் கணக்கில் எடுத்து கொள்கின்றனர்.

சுழியத்தை (0)த் தவிர்த்து 04.11.1977 என்ற தேதியை எண் கணிதபடி கணக்கிடும் போது பிறவி எண் 4 ஆகவும்; விதி எண் 3 ஆகவும் அமைகிறது,

தேதியை மட்டும் ஒற்றையிலக்க எண்ணாக்கி வரும் எண்ணே பிறவி எண்ணாகும், (04 என்ற இரட்டை இலக்க எண்ணை ஒற்றை இலக்க எண்ணாக்க, கூட்டும் போது 0+4=4 என்ற ஒற்றையிலக்க எண் வருகிறது)

பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகியவற்றில் வரும் அனைத்து எண்களின் ஒட்டுமொத்தக் கூட்டு மதிப்பின் மூலம் வரும் ஒற்றையிலக்க எண்ணே விதி எண்ணாகும்.

| | | | |
|---|---|---|---|
| (04) 0+4 | = | 4 | |
| (11) 1+1 | = | 2 | |
| (1977) 1+9+7+7= 24 = 2+4 | = | 6 | |
| | | 12 | = 1+2 = 3 |

விதி எண் கூட்டுத் தொகைக்குக்கூட சுழியத்தை (0)க் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் சுழியம் (0) இல்லாமல் 4D அதிர்ஷ்ட விளையாட்டு நடைபெறுவதில்லை. இந்த முரண்பாட்டால் எண் கணிதத்தைப் பயன்படுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பது வெற்றிக்குரிய வழியாக அமையாது.... அமையவும் வாய்ப்பில்லை.

## 5. 4D-ல் ஆங்கில வார்த்தைகள்

இன்றைய காலகட்டத்தில் உலகந்தழுவிய நிலையில் ஆங்கில எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதே நேரத்தில் ஆங்கில மொழி அழிந்து கொண்டு வருகிறது.

எப்படியெனில் மொழி என்பது வேறு; எழுத்துவகை என்பது வேறு.

மொழி என்பது ஒலி வடிவமாகும்.... உச்சரிக்கப் படுவதாகும்... ஒலிக்கப்படுவதாகும்.

எழுத்து என்பது வரி வடிவமாகும்..... எழுதப்படுவதாகும்.

மொழி என்பது ஒவ்வொருவரின் உச்சரிப்புக்கேற்றவாறு சற்று மாறுபடும்.

எழுத்து என்பது அந்தந்த கால கட்டத்திற்கேற்ப எழுதப்படும் பொருட்களைப் பொறுத்து அவ்வப்போது சில புது வடிவங்களில் எழுதப்படும்.

உச்சரிக்கும் வகையிலும், எழுத்து வகையிலும் நீண்ட நாட்கள் இடைவெளியில் மாறுபாடு ஏற்பட்டால் அந்தமொழி, எழுத்து ஓரளவு நிலைத்துவாழும். புதுப்புது எழுது பொருட்கள், எழுதப்படும் பொருட்களின் காரணமாக சில எழுத்துக்கள் காலத்தின் கட்டாயத்தால் தவிர்க்கப்படுகின்றன. எழுத்து என்பதிருந்தால் தான் அதை உச்சரித்து மொழியை பாதுகாத்துப் பயன்படுத்த முடியும்.

தனக்கென்று தனித்தொரு எழுத்து.... வரி வடிவமில்லையேல் எந்த மொழியும் நீடித்து வாழ முடியாது. இத்தகைய தனிப்பட்ட எழுத்து... வரிவடிவம் இல்லாததால் சமஸ்கிருதம் எனும் மொழி பயன்பாட்டில் குறைந்திருப்பதை அறிந்து கொள்ளலாம்.

உலக அளவில் ஆங்கில மொழி, எழுத்து பயன்பாட்டிலிருந்தாலும் பல்வேறு விதமாக பயன்படுத்தபடுகிறது. இந்த வெவ்வேறு விதமான பயன்பாடுகள்தான் ஆங்கில மொழி, எழுத்துக்களின் ஆணிவேரையே அசைத்துப் பார்க்கின்றன.

எண் கணிதம் (நியூமராலஜி) எனும் பெயரிலும், பெயரியல் (நேமாலஜி) எனும் பெயரிலும் தான் ஆங்கில மொழியும், எழுத்துக்களும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

மொழி என்பது உயிர் போன்றது. எழுத்து என்பது உடல் போன்றதாகும். இவ்விரண்டுமே முக்கியம் தான்; ஒன்று அழிந்தால் மற்றொன்றும் உடன்கட்டையேறிவிடும்.

இத்தகைய சிக்கலுக்குள் மாட்டிக் கொள்ளாமல் தமிழ் மொழியும் (ஒலிவடிவம்), தமிழ் எழுத்துக்களும் (வரிவடிவம்), அன்றைய ஓலைச்சுவடிகள் காலம் தொடங்கி, கல்வெட்டுக் காலங்களைக் கடந்து இன்றைய கணிணி காலம் வரை நீடித்து வாழ்கிறது.

இந்தியாவில் பயன்பாட்டில் உள்ள ஆங்கிலத்திற்கும்.... மலேசியாவில் பயன்பாட்டில் உள்ள ஆங்கிலத்திற்கும் ஓரளவு ஒற்றுமை காணப்படினும் பல வகையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

உதாரணமாக,

'AMERICA' என்ற ஆங்கில வார்த்தையை இந்தியாவில் அமெரிக்கா என்று பெரும்பாலானோரால் உச்சரிக்கப்படுகிறது. ஆனால் மலேசியாவில் 'எமெரிக்கா' என்று பெரும்பாலானோரால் உச்சரிக்கபடுகிறது.

இந்தியாவில் பேருந்து எனும் தமிழ் மொழியின் ஆங்கில மொழி மாற்ற வடிவத்தை Bus என்று எழுதுகிறார்கள். மலேசியாவில் மலாய் மொழியின் உச்சரிப்பை Bas என்று ஆங்கில எழுத்து வடிவத்தில் எழுதுகிறார்கள்.

இப்படியாக, உச்சரிப்பு ரீதியாகவும் எழுத்து ரீதியாகவும் இந்தியா, மலேசிய நாடுகளில் மட்டுமில்லை, இது போன்ற பலநாடுகளில்.... பலவகை மாறுபட்ட உச்சரிப்புகளிலும், எழுத்து வடிவங்களிலும் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது.

ஆங்கில மொழி, எழுத்து வடிவம் சம்பந்தபட்ட ஆராய்ச்சி ஏனென்றால், சிலர் ஆங்கில எழுத்துகளுக்குரிய எண்மதிப்புகளைப் பயன்படுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் ஈடுபடுவதால் அது சம்பந்தபட்ட வழிப்புணர்வுக்காகவே ஆகும்.

ஆங்கில எழுத்துகள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட வெவ்வேறு எண்ணின் பலன்களை தருவதாக அனுமானிக்கப்பட்டு.... அனுபவிக்கபட்டு.... பயன்படுத்தபட்டு வருகின்றன.

ஆங்கில எழுத்துக்களும் அந்த எழுத்துக்களுக்குரிய எண் மதிப்புகளையும் காணலாம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A-1, | B-2,, | C-3, | D-4, | E-5, | F-8, | G-3, | H-5, | I-1, | J-1, |
| K-2, | L-3, | M-4, | N-5, | O-7, | P-8, | Q-1, | R-2, | S-3, | T-4, |
| U-6, | V-6, | W-6, | X-5, | Y-1, | Z-7 | | | | |

ஆங்கில எழுத்துக்களுக்குரிய எண்மதிப்புகளைப் பயன்படுத்தி 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பது எப்படியென்றால்,

'அதிர்ஷ்டம்' என்பதின் ஆங்கில மொழிபெயர்ப்பின், ஆங்கில எழுத்து வடிவத்தை 'Luck' என்று எழுதப்படுகிறது. இதில் ஆங்கில எழுத்துகளுக்குரிய எண் மதிப்பை ஒப்பிட்டால்,

| | | | | |
|---|---|---|---|---|
| L | U | C | K | |
| 3 | 6 | 3 | 2 | என்று வருகிறது. |

இந்த 3632 என்ற நான்கு இலக்க (4D) எண்ணைப்பயன்படுத்தி 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம். இதுபோலவே,

| | | |
|---|---|---|
| SHRI | - | 3521 |
| IWIN | - | 1615 |
| CASH | - | 3135 |

என்பன போன்ற, லட்சுமி கடாட்சமுள்ள, வெற்றியை, அதிர்ஷ்டத்தைக் குறிக்கும் ஆங்கில வார்த்தை வடிவங்களைப் பயன்படுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

மேற்கண்ட முறையைப் பயன்படுத்தி நானும் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றிருக்கிறேன். அதில் ஒருசிலமுறை வெற்றி பெற்று பரிசுத் தொகையைப் பெற்று பயனடைய முடிந்தது. ஆனால் ஒருசிலமுறை வெற்றி பெற முடியாமல் போய்விடுகிறது.

ஒரே கோணத்தில் சிந்தித்து, கணித்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கும் போது ஒருசில முறை வெற்றி பெற்றும், மற்றசில முறை தோல்வியும் ஏற்படுவதால் இந்த முரண்பாடு ஏன் என்று சிந்திக்கவும் தோன்றியது.

இதனால் ஆங்கில எழுத்துகளுக்குரிய எண்மதிப்புகளையும், 4D அதிர்ஷ்ட விளையாட்டில் இடம் பெறக்கூடிய எண்களையும் ஒப்பிட்டு பார்க்கும் ஆராய்ச்சி மனப்பான்மை உண்டானது. அதில் சில புதிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய சிந்தனைகள் உண்டாயின.

ஆமாம், ஆங்கில எழுத்துக்களுக்குரிய எண்மதிப்புகளைப்பார்க்கும் போது, அவற்றில் 1,2,3,4,5,6,7,8 ஆகிய எட்டு(8) எண்களே இடம் பெறுகின்றன. ஆனால் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் இடம்பெறும் எண்களோ, 0,1,2,3,4,5.6,7,8,9 எனும் பத்து(10) எண்களாகும்.

இதில் சுழியம் (0), ஒன்பது (9) ஆகிய இரு (2) எண்களைத் தவிர்த்துப் பயன்படுத்தும் ஆங்கில எழுத்து வடிவ அதிர்ஷ்ட வார்த்தைகளின் எண்கள் பரிசுக்குரிய… வெற்றிக்குரிய எண்ணாக அமையாது. சரியான கணித சிந்தனைப் படியான ஆங்கில எழுத்து வடிவ அதிர்ஷ்ட வார்த்தைகளானால் ஒவ்வொரு முறையும் அல்லவா அதிர்ஷ்டம் உண்டாக வேண்டும். ஏதோ ஒருமுறை அதிர்ஷ்டத்தை உண்டாக்கித் தருவதால் சரியான கணித சிந்தனைக்குட்பட்டதல்ல என்று எண்ணத் தோன்றுகிறது.

மேலும் 0,9 ஆகிய இரு எண்களை ஒதுக்கிவிட்டு உள்ள ஆங்கில எழுத்து வடிவ எண்மதிப்புகளைப் பயன்படுத்தி 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் ஈடுபடுவதும் ஒவ்வொரு முறையும், முழுமையான வெற்றி வாய்ப்பைத் தருவதில்லை என்பதே உண்மையாகும்.

இதனால், 4D அதிர்ஷ்ட விளையாட்டில் கணித சிந்தனைக்கெல்லாம் இடமில்லை என்பதையும், அதிர்ஷ்டம் என்ற ஒன்று ‘அது - இஷ்டமாக’ நம்மைத் தேடி வந்தாலேயன்றி வேறு வழியில்லை என்பதையும் அறிய முடிகிறது.

அதிர்ஷ்டம் நம்மைத் தேடி வரும் வழிகள் அடைக்கபட்டிருந்தால், மூடிவைக்கப்பட்டிருந்தால் அதிர்ஷ்டம் நம்மைத் தேடியே வராது. எனவே, அதிர்ஷ்டம் வரும் வழிகள் எது எனவும், அத்தகைய அதிர்ஷ்டத்தை வரவேற்று அனுபவிக்கும் வழிமுறைகள் எவை என்று ஆராய்ந்தும் அவற்றில் ஈடுபட வேண்டும்.

## 6. முழு எண் தொடர்

எண்தொடர் வரிசையில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று (1) எனும் எண்ணை முதலாவதாகக் கொண்டு தொடங்கும் தொடர்வரிசை ஒரு வகையாகும். சுழியம் (0) எனும் எண்ணை முதலாவதாகக் கொண்டு தொடங்கும் முழு எண் தொடர்வரிசை மற்றொரு வகையாகும்.

உலகளவில் ஆரம்ப காலங்களில், ஒன்று(1) என்ற எண்ணை முதலாவதாகக் கொண்டு தொடங்குவதுதான் கண்டுபிடிக்கப்பட்டு… கடைபிடிக்கபட்டு…. பயன்படுத்தபட்டு வந்தது. ஆனால், அதன் தொடர்வரிசையில் சில சிக்கல்களும்…. முரண்பாடுகளும்….

கருத்துவேறுபாடுகளும், பயன்பாட்டுக்குளறுபடிகளும் உண்டாயின. அதனால் உலகளவில் ஒரே மாதிரியான எண் வடிவங்களைப் பயன்படுத்த முடியாமல் தடுமாற்றம் ஏற்பட்டது.

அந்த நேரத்தில்தான் இந்தியக் கணித ஆராய்ச்சி வல்லுநர்களால் சுழியம்(0) என்ற புது எண் கண்டுபிடிக்கப்பட்டு உலகப் பயன்பாட்டுக்காகத் தாரை வார்க்கப்பட்டது. மேலும், ------------------- எண் தொடர் வரிசையை, முழு எண் தொடர்வரிசையாக பெயர் மாற்றம் செய்து, உலக மக்கள் அனைவரும் பயன்படுத்தும்படி, சுழியத்தை(0) பயன்படுத்தும் வழிமுறைகளை, விதிமுறைகளை தெரியப்படுத்தினார்கள்.

இந்தியக் கணித ஆராய்ச்சி வல்லுநர்களால்தான் உலகளவில் ஒரே மாதிரியான எண் வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதும், அதற்குச் சுழியத்தின் (0) பங்களிப்பு எவ்வுளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் இதன் மூலம் அறிந்திருப்பீர்கள்.

இத்தகைய சுழியத்தின் (0) பங்களிப்பு இல்லாமல் இருக்கின்ற, ஜாதக கிரக அமைப்புகள், எண்கணிதம், ஆங்கில எழுத்துகளின் எண்மதிப்புகள் மூலம் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பது என்பது சிந்தித்து செயல்பட வேண்டிய விஷயமாகும்.

## 7. 4D-ல் கணித விதிகள்

எண்களில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்.... போன்ற கணித விதிகளைப் பயன்படுத்தினால் அவற்றின் எண் மதிப்பையே மாற்றி அமைத்துவிடலாம்.

உதாரணமாக,

'23' என்ற இரண்டு இலக்க எண்ணைத் தங்களுக்குள் கூட்டினால் 2+3=5 என்ற ஒற்றை இலக்க எண் வருகிறது.

'23' என்ற இரண்டு இலக்க எண்ணைத் தங்களுக்குள் பெருக்கினால் 2x3=6 என்ற ஒற்றை இலக்க எண் வருகிறது.

'23' என்ற இரண்டு இலக்க எண்ணைத் தங்களுக்குள் கழித்துக் கொண்டால் 2-3=-1 எனவும், 3-2=1 எனவும் எண்மதிப்புகள் வருகின்றன.

'23' என்ற இரண்டு இலக்க எண்ணைத் தங்களுக்குள் வகுத்துக் கொண்டால்

3/2 = 1.5 என்ற ஈவும், சுழியம் (0) என்ற மீதியும் வருகிறது.

2/3 = 0.6666 என்ற ஈவும், '2' என்ற மீதியும் வருகிறது.

இனி, கணித விதிமுறைகளில் 'சுழியம்' (0) என்ற எண் ஏற்படுத்தும் மாயாஜாலங்களைப் பார்ப்போம்.

'50' என்ற இரண்டு இலக்க எண்ணைத் தங்களுக்குள் கூட்டினால் 5+0=5 என்ற ஒற்றை இலக்க எண் வருகிறது.

'50' என்ற இரட்டை இலக்க எண்ணைத் தங்களுக்குள் பெருக்கினால் 5x0=0 என்ற ஒற்றை இலக்க எண் வருகிறது.

50' என்ற இரட்டை இலக்க எண்ணைத் தங்களுக்குள்ளே கழித்துக் கொண்டால் 5-0=5, 0-5=-5 என்ற எண்மதிப்புகள் வருகிறது

'50' என்ற இரண்டு இலக்க எண்ணைத் தங்களுக்குள் வகுத்துக் கொண்டால் விடையே காண முடியாது.

கணித விதிகளைப் பயன்படுத்தி 4Dஅதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுக்க முற்பட்டால் நாம் குழம்பி போவது நிச்சயம்.

கணித விதிமுறைகளில் ஒன்றான கூட்டல் விதிமுறையை மட்டும் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கும் 4Dஅதிர்ஷ்டஎண் வெற்றிக்குரிய எண்ணாக அமையுமா என்பது சந்தேகமே.

எண்கணித ஜோதிட கூட்டல் விதிமுறையில் 'சுழியம்' (0) என்ற எண் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது…. தவிர்க்கபடுகிறது. எனவே சுழியத்தை(0)த் தவிர்த்து நாம் தேர்ந்தெடுக்கும் 4Dஅதிர்ஷ்டஎண் சரியான தேர்வாகவும் அமைய வாய்ப்பில்லை. சரியான தேர்வென்றால் ஒவ்வொருமுறையும் அந்த விதிமுறை வெற்றியடைய வேண்டுமல்லவா?

எண்கணிதத்தில் மட்டுமல்ல, மற்ற கணிதவிதிமுறைகளில் கூட நாம் என்ன தான் கணிதப் புலியாக இருந்தாலும், அதிர்ஷ்டப் புலியாக மாறுவதற்கு அதிர்ஷ்ட தேவதை நம்மை அதிர்ஷ்ட காட்டிற்குள் வாழ வைக்க நினைக்க வேண்டும்.

## 8. 4D-ல் கம்யூனிஸம்

அதிர்ஷ்டத்தை பற்றியும், அதிர்ஷ்டம் வரும் வழியைப் பற்றியும்

'மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்' தனது தத்துவப்பாடலில்.

" நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டை கெடுத்ததோடு தானும் கெட்டார் - சிலர்
அல்லும் பகலும் வெறும் கல்லாய் இருந்து விட்டு
அதிர்ஷ்டம் இல்லை என்று அழுத்துக் கொண்டார் " என்று எழுதியுள்ளார்.

ஏதோ ஒருவழியில் உழைத்தால் தான்….. செயல்பட்டுக் கொண்டிருந்தால் தான் அதிர்ஷ்டத்திற்கு இணையான தன்னிறைவு வாழ்க்கை, முன்னேற்றம் வரும் என்ற பொருள்பட இப்பாடல் அமைந்திருக்கிறது.

அதேபோல் உழைத்துக் கொண்டிருந்தால்…. ஆக்கப்பூர்வமான வழிகளில் செயல்பட்டுப் கொண்டிருந்தால்… அதிர்ஷ்டத்திற்குரிய வாழ்க்கைத் தர மேம்பாடு அமையும் என்றால்…. அதிர்ஷ்ட விளையாட்டுகளில் பங்கேற்றால் அதிர்ஷ்டம் நம்மைத் தேடி வராமல் வேறு எங்கே போய்விடும்?

## 9. 4D-அதிர்ஷ்ட விளையாட்டு விதிமுறைகள்

பயன்பாட்டில் உள்ள மற்ற அதிர்ஷ்ட போட்டிகளுக்கும், 4Dஅதிர்ஷ்ட விளையாட்டு போட்டிகளுக்கும் சற்று வித்தியாசங்கள் இருக்கின்றன.

4Dஅதிர்ஷ்ட விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க ஒருவர் எத்தனை எண்களை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து பங்கேற்கலாம்.

ஒரு எண்ணையே குறிப்பிட்ட மடங்கு எத்தனை பேர் வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து பங்கேற்கலாம்.

ஒருவரே ஒரே எண்ணை விதிக்குட்பட்ட குறிப்பிட்ட மடங்கு தேர்ந்தெடுத்து பங்கேற்கலாம்.

4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் உள்ள Straight, 1i, 4i, 6i, 12i, மற்றும் 24i விதிமுறைகளில் ஒன்றிலோ, ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளிலோ அல்லது அனைத்து முறைகளிலுமோ பங்கேற்கலாம்.

4Dஅதிர்ஷ்ட விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்கு நமக்கு அதிர்ஷ்டம் தரும் நான்கிலக்க எண்களைத் தேடி அலைய வேண்டியதில்லை.

4னூல் சுழியம் (0) முதல் - ஒன்பது (9) வரையுள்ள பத்து (10) எண்களே பயன்படுத்தப்படுகின்றன. இவைகளைத்தான் பயன்படுத்தியாக வேண்டும். இந்த சுழியம் (0) முதல் ஒன்பது (9) வரையுள்ள எண்களை, எண்தொடர் வரிசையில் எழுதும் போது,

| | |
|---|---|
| ஒரு இலக்க எண் | 1 |
| இரண்டு இலக்க எண் | 2 2 |
| மூன்று இலக்க எண் | 3 3 3 |
| நான்கு இலக்க எண் | 4 4 4 4 |
| ஐந்து இலக்க எண் | 5 5 5 5 5 |
| ஆறு இலக்க எண் | 6 6 6 6 6 6 |
| ஏழு இலக்க எண் | 7 7 7 7 7 7 7 |
| எட்டு இலக்க எண் | 8 8 8 8 8 8 8 8 |
| ஒன்பது இலக்க எண் | 9 9 9 9 9 9 9 9 9 |
| பத்து இலக்க எண் | 0 1 2 3 4 5 6 7 8 9 |
| பதினோரு இலக்க எண் | 0 1 2 3 4 5 6 7 8 9 0 |
| பன்னிரண்டு இலக்க எண் | 0 1 2 3 4 5 6 7 8 9 0 1 |

என்று, இப்படித் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்க முடியும். மேற்கண்ட பலவிதமான இலக்க எண்களில் ‘நான்கு இலக்க எண்களை மட்டுமே பயன்படுத்தி 4Dஅதிர்ஷ்ட விளையாட்டு பின்பற்றப்படுகிறது.

இந்த நான்கு இலக்க (4D) எண்கள் மட்டுமின்றி மற்ற இலக்க எண்களையும், நான்கு இலக்க (4D) எண்களாக மாற்றி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க முடியும்.

இந்த விதிமுறைகளை அடுத்தடுத்து வரும் அத்தலைப்புகளின் கீழே விளக்கமாக தரப்பட்டுள்ளது.

**<u>நேரெண் (Straight):-</u>**

ஒரு குறிபிட்ட நான்கு எண்களை தேர்ந்தெடுத்து, அவைகளை அடுத்தடுத்து வரிசைப்படுத்தி…. இலக்கப்படுத்தி அந்த வரிசைப்படியே 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பது.

பிறகு, 4D அதிர்ஷ்ட விளையாட்டுப் போட்டிகளின் முடிவில் ஒருவர் தேர்ந்தெடுத்த எண்கள் அதே வரிசைப்படி பரிசுக்குரியதாக அமைந்தால் பரிசுத்தொகை பங்கேற்றவர்க்கு கிடைக்கும்.

உதாரணமாக, 2,3,4,5, ஆகிய நான்கு எண்களை நான்கு இலக்கப்படி வரிசைப்படுத்தினால்

| | | | |
|---|---|---|---|
| 2345 | 3245 | 4235 | 5234 |
| 2354 | 3254 | 4253 | 5243 |
| 2435 | 3425 | 4325 | 5324 |
| 2453 | 3452 | 4352 | 5342 |
| 2534 | 3524 | 4523 | 5423 |
| 2543 | 3542 | 4532 | 5432 |

என 24 எண்கள் வருகின்றன.

இதில் ஏதோ ஒரு எண்ணை, அல்லது ஒருசில எண்களை, அல்லது அனைத்து எண்களையுமோ, தோ்ந்தெடுத்து பங்கேற்பதாகும்.

மேற்கண்ட எண்களில், ‘3245’ என்ற எண்ணைத் தோ்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்று, அன்றைய 4D அதிர்ஷ்ட விளையாட்டுப் போட்டி முடிவுகளில் 3245 பரிசுக்குரிய எண்ணாக அமைந்தால் தோ்ந்தெடுத்து பங்கேற்றவருக்கு பரிசுத்தொகை உண்டாகும்.

## 10. ஓரிலக்க எண்

நமக்கு அதிர்ஷ்டம் தரும் எண் என்று நினைக்கக் கூடிய ஒரு இலக்க எண்ணைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதாகும்.

உதாரணமாக, நமக்கு ‘3’ (மூன்று) என்ற ஓரிலக்க எண் அதிர்ஷ்டம் தரும் எண் என்று தெரிந்தால், அந்த ஓரிலக்க எண்ணுடன் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க

முடியாது. எனவே, அந்த ஓரிலக்க எண்ணை, நான்கு இலக்க எண்ணாக மாற்றிப் பங்கேற்க வேண்டும்.

‘3’ (மூன்று) என்ற ஓரிலக்க எண்ணை நான்கு இலக்க எண்ணாக மாற்றும் போது ‘3333’ (மூன்றாயிரத்து முன்னூற்று முப்பத்து மூன்று) என்ற எண் வருகிறது. இந்த ‘3333’ என்ற எண்ணைத் தேர்ந்தெடுத்துதான் நாம் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க முடியும்.

4னு அதிர்ஷ்ட விளையாட்டில் சுழியம் (0) முதல் - 9 (ஒன்பது) வரை மொத்தம் பத்து (10) எண்களே பயன்படுத்தபடுவதால், மொத்தம் 10 வகையான ஓரிலக்க எண்களே உள்ளன. இந்த பத்து வகையான ஓரிலக்க எண்களையும், நான்கிலக்க எண்களாக மாற்றும் போது 10 வகையான 4னு எண்கள் கிடைக்கின்றன.

| ஓரிலக்க எண் | நான்கிலக்க எண் |
|---|---|
| 0 | 0000 |
| 1 | 1111 |
| 2 | 2222 |
| 3 | 3333 |
| 4 | 4444 |
| 5 | 5555 |
| 6 | 6666 |
| 7 | 7777 |
| 8 | 8888 |
| 9 | 9999 |

## 11. 4i விதிமுறை:-

4D அதிர்ஷ்ட விளையாட்டுகளில் பங்கேற்க நான்கு இலக்க எண்கள் தேவை. எனினும் நமக்கு அதிர்ஷ்டம் தரும் என்று நினைக்கக் கூடிய இரண்டு (2) இலக்க எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க உதவுவது 4i விதிமுறையாகும்.

உதாரணமாக, நமக்கு ‘23’ என்ற இரண்டு இலக்க எண் அதிர்ஷ்டம் தரும் எண் என்று தெரிந்தால், இந்த இரண்டிலக்க எண்ணுடன் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க முடியாது. இந்த இரண்டு இலக்க எண்ணை நான்கு இலக்க எண்ணாக மாற்ற வேண்டும்.

‘23’ என்ற இரண்டு இலக்க எண்ணை 4i விதிமுறைப்படி நான்கு இலக்க எண்ணாக மாற்றும் போது, 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் உள்ள சூட்சமங்களை, மாயாஜாலங்களை அறிய முடிகிறது.

‘4i’ விதிமுறை என்பது, இரண்டு இலக்க எண்ணில், ஒரு எண் ஏதேனும் மூன்றிலக்கங்களிலும் மற்றொரு எண் ஏதோ ஓரிலக்கத்திலும் வருவதாகும்.

‘23’ என்ற இரண்டு இலக்க எண்ணை 4i விதிமுறைப்படி நான்கிலக்க எண்ணாக மாற்றும் போது,

| | |
|---|---|
| 2223 | 3222 |
| 2232 | 3233 |
| 2322 | 3323 |
| 2333 | 3332 |

என எட்டு (8) விதமான எண்கள் வருகின்றன. இந்த எட்டு விதமான எண்களில் எந்த எண்ணை அதிர்ஷ்ட எண்ணாகத் தேர்ந்தெடுப்பது என்ற திகைப்பு வரத்தான் செய்யும். இந்த திகைப்பிலிருந்து விடுபட்டு…. தெளிவு பெற்றுத் தான் நாம் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க வேண்டி இருக்கிறது.

இந்த 8 விதமான எண்களில் ஏதோ ஒரு எண்ணையோ, ஒருசில எண்களையோ, அல்லது அனைத்து எண்களையுமோ அதிர்ஷ்ட எண்ணாக நினைத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

அடுத்து மேற்குறிப்பிட்ட எண்களின் கூட்டுதலில் வரும், ஒற்றையிலக்க எண்ணின் அதிர்ஷ்ட வாய்ப்பைப் பயன்படுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

மூன்று இலக்கங்களில் இரண்டு (2) என்ற எண்ணும், ஒரு இலக்கத்தில் மூன்று (3) என்ற எண்ணும் வரும்போது 2223 = 2+2+2+3 = 9 என வருகிறது

மூன்று இலக்கங்களில் மூன்று (3) என்ற எண்ணும், ஒரு இலக்கத்தில் இரண்டு (2) என்ற எண்ணும் வரும்போது 3332 = 3+3+3+2 = 11 = 1+1 = 2 என வருகிறது.

இதே போன்று மற்ற இரண்டு இலக்க எண்களையும் 4i விதிமுறைக்கு உட்படுத்தி, அதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுத்து, 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

## 12. 6i விதிமுறை:-

நமக்கு அதிர்ஷ்டம் தரும் என்று நினைக்கக்கூடிய இரண்டு (2) இலக்க எண்களைத் தேர்ந்தெடுத்து, அவைகளை நான்கு இலக்க எண்களாக்கி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க உதவும் மற்றொரு விதிமுறை 6i விதிமுறையாகும்.

உதாரணமாக, நமக்கு ‘41’ என்ற எண் அதிர்ஷ்டம் தரும் எண் என்று தெரிந்தால், அந்த இரண்டு இலக்க (41) எண்ணுடன் 4D அதிர்ஷ்ட போட்டியில் பங்கேற்க முடியாது. இந்த இரண்டு இலக்க எண்ணை நான்கு இலக்க எண்ணாக மாற்ற வேண்டும்.

‘41’ என்ற இரண்டு இலக்க எண்ணை 6i விதிமுறைப்படி நான்கிலக்க எண்ணாக மாற்றும் போது 4D அதிர்ஷ்ட விளையாட்டில் உள்ள ஆச்சர்யங்களை அனுபவிக்க முடிகிறது.

‘6i’ விதிமுறை என்பது, இரண்டு (2) இலக்க எண்ணில், ஒரு எண் ஏதேனும் இரண்டு இலக்கங்களிலும் மற்றொரு எண் மற்ற ஏதேனும் இரண்டு இலக்கங்களிலும் வருவதாகும்.

அந்த வகையில் ‘41’ என்ற இரண்டு இலக்க எண்ணை ‘6i’ விதிமுறைப்படி நான்கு இலக்க எண்ணாக மாற்றும் போது,

| | |
|---|---|
| 1144 | 4114 |
| 1414 | 4141 |
| 1441 | 4411 |

என ஆறு (6) விதமான எண்கள் வருகின்றன. இந்த 6 வகையான எண்களில் எந்த எண்ணை அதிர்ஷ்ட எண்ணாகத் தேர்ந்தெடுப்பது என்ற திகைப்பு வரத்தான் செய்யும். இத்தகைய திகைப்பிலிருந்து விடுபட்டு.... தெளிவு பெற்றுத்தான் நமக்கான எண்ணைத் தேர்ந்தெடுத்து நாம் 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க வேண்டியிருக்கிறது.

இந்த ஆறு வகையான எண்களில் ஏதோ ஒரு எண்ணையோ, ஒருசில எண்களையோ, அல்லது அனைத்து எண்களையுமோ அதிர்ஷ்ட எண்ணாக பாவித்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

அடுத்து, 6 வகையான எண்களின் கூட்டுதலில் வரும் ஒற்றை இலக்க எண்ணைப் பொறுத்தும், அதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

இதில், 6 வகையான எண்களின் கூட்டுதலிலும் குறிப்பிட்ட ஒரு எண்ணே வருகிறது.

1144 = 1+1+4+4 = 10 = 1+0 = 1

இதைப் போலவே, மற்ற இரண்டு இலக்க எண்களையும் 6i விதிமுறைக்கு உட்படுத்தி, நமக்குரிய அதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுத்து, 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கவேண்டிய பொறுப்பு நம்முடையதாகும்.

## 13. 12i விதிமுறை:-

ஓரிலக்க (3), ஈரிலக்க (23), (41) எண்களைப் போலவே மூவிலக்க (456) எண்களையும், நான்கு இலக்க எண்களாக்கி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க உதவுவதே 12i விதிமுறையாகும்.

உதாரணமாக, '456' (நானூற்றி ஐம்பத்தாறு) என்ற மூன்றிலக்க எண் அதிர்ஷ்டம் தரும் எண் என்று தெரிந்தால், அந்த மூன்று இலக்க (456) எண்ணை, நான்கிலக்க எண்ணாக மாற்ற வேண்டும்.

'456' என்பன போன்ற மூன்றிலக்க எண்களை, நான்கு இலக்க எண்களாக மாற்றுவதற்கு 4D அதிர்ஷ்ட விளையாட்டுப் போட்டியில் '12i' விதிமுறை என்று பெயர்.

12i விதிமுறையில், மூன்றிலக்க எண்களில் ஒரு எண் ஏதேனும் இரண்டு இலக்கங்களிலும், மற்ற இரு எண்கள் தலா ஏதேனும் ஒரு இலக்கத்திலும் வரும்.

அந்த வகையில் '456' என்ற மூன்றிலக்க எண்ணை '12ை' விதிமுறைப்படி நான்கு இலக்க எண்ணாக மாற்றும் போது,

| | | |
|---|---|---|
| 4456 | 4556 | 4566 |
| 4465 | 4565 | 4556 |
| 4546 | 4655 | 4665 |
| 4564 | 5456 | 5466 |
| 4645 | 5465 | 5646 |
| 4654 | 5546 | 5664 |
| 5446 | 5564 | 6456 |
| 5464 | 5645 | 6465 |
| 5644 | 5654 | 6546 |
| 6445 | 6455 | 6564 |
| 6454 | 6545 | 6645 |
| 6544 | 6554 | 6654 |

என, 36 விதமான எண்கள் வருகின்றன.

இந்த '36' விதமான எண்களில் எந்த எண்ணை அதிர்ஷ்ட எண்ணாகத் தேர்ந்தெடுப்பது என்பதில் மளைப்பும்.... மயக்கமும் வரத்தான் செய்யும். அந்த மளைப்பிலிருந்தும்.... மயக்கத்திலிருந்தும் மீண்டு தெளிவு பெற்றுத்தான், நமக்கான அதிர்ஷ்ட எண்ணைத் தேர்தெடுத்து, நாம் 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க வேண்டி இருக்கிறது.

இந்த 36 வகையான எண்களில் ஏதோ ஒரு எண்ணையோ, ஒரு சில எண்களையோ, அல்லது 36 விதமான எண்களையுமே பெருந்தன்மையோடு அதிர்ஷ்ட எண்ணாக நினைத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

அடுத்து, 36 விதமான எண்களின் கூட்டுதலில் வரும் ஒற்றை இலக்க எண்ணின் அதிர்ஷ்ட வாய்ப்பைப் பயன்படுத்தி அவ்வாறான எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

மேற்கண்ட '36' எண்களின் ஒற்றை இலக்க கூட்டு எண் மூன்று (3) வித எண்ணாக வருகிறது.

1. இரண்டு இலக்கங்களில் '4' என்ற எண்ணும் (44)
   ஒரு இலக்கத்தில் '5' என்ற எண்ணும் (5)
   மற்றொரு இலக்கத்தில் '6' என்ற எண்ணும் (6)
   இடம் பெறக்கூடிய எண் மதிப்புகள் அமைந்தால், அத்தகைய எண்களின் ஒற்றையிலக்கக் கூட்டு எண்
   4+4+5+6 = 19 =1+9 = 10 =1+0 = 1 என வருகிறது.

2. இரண்டு இலக்கங்களில் '5' என்ற என்னும் (55)
   ஒரு இலக்கத்தில் '6' என்ற எண்ணும் (6)
   மற்றொரு இலக்கத்தில் '4' என்ற எண்ணும் (4)
   இடம் பெறக்கூடிய எண் மதிப்புகள் அமைந்தால், அத்தகைய எண்களின் ஒற்றையிலக்கக் கூட்டு எண்
   5+5+6+4 = 20 = 2+0 =2 என வருகிறது.

3. இரண்டு இலக்கங்களில் '6' என்ற எண்ணும் (66)
   ஒரு இலக்கத்தில் '4' என்ற எண்ணும் (4)
   மற்றொரு இலக்கத்தில் '5' என்ற எண்ணும் (5)
   இடம் பெறக்கூடிய எண் மதிப்புகள் அமைந்தால் அத்தகைய எண்களின் ஒற்றையிலக்கக் கூட்டு எண்
   6+6+4+5 = 21 = 2+1 = 3 என வருகிறது.

இது போன்று, மற்ற மூன்றிலக்க எண்களையும் 12i விதிமுறைக்கு உட்படுத்தி, அதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

## 14. 24i விதிமுறை:-

நான்கு (4) வகையான எண்கள் கொண்ட நான்கு இலக்க (4D) எண்ணை, அவ்வெண்கள் இடம்பெறும் இலக்க இடத்தை மாற்றி… மாற்றி புதுப்புது எண் மதிப்புகளைக் கண்டுபிடித்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதற்கு 24i விதிமுறை உதவுகிறது.

உதாரணமாக, நான்கு வெவ்வேறு வகையான எண்கள் கொண்ட 2350 என்ற எண்ணை 24ை விதிமுறைக்கு உட்படுத்தும் போது,

| | | | |
|---|---|---|---|
| 0235 | 2035 | 3025 | 5023 |
| 0253 | 2053 | 3052 | 5032 |
| 0325 | 2305 | 3205 | 5203 |
| 0352 | 2350 | 3250 | 5230 |
| 0523 | 2503 | 3502 | 5302 |
| 0532 | 2530 | 3520 | 5320 |

என, '24' விதமான எண்கள் வருகின்றன.

இந்த 24 விதமான எண்களில் எந்த எண்ணை அதிர்ஷ்ட எண்ணாகத் தேர்ந்தெடுப்பது என்ற திகைப்பு... மளைப்பு வரத்தான் செய்யும். இத்தகைய திகைப்பிலிருந்து... மளைப்பிலிருந்து விடுபட்டுத்தான் அதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுத்து, 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க வேண்டியிருக்கிறது.

மற்ற ஈரிலக்க (23),(41) மூவிலக்க (456) எண்களைப்போல் நான்கு இலக்க (2350) எண்களில் அதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுப்பதில் சிரமமில்லை. ஒரு குறிப்பிட்ட நான்கு இலக்க எண் நமக்கு அதிர்ஷ்ட எண்ணாகத் தெரிந்தால், அந்த எண்ணையே நேரடியாகப் பயன்படுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

நேரடியாக உள்ள நான்கு இலக்க எண்களில், அதிர்ஷ்ட வாய்ப்புகள் சம்பந்தபட்ட சந்தேகம் வரும் போது தான், நாம் 24i விதிமுறையை நாட வேண்டி இருக்கிறது.

ஆக, நான்கு இலக்க (4D) எண்களை பொறுத்தவரை நாம் அதிர்ஷ்ட எண்ணாக நினைக்கும் நான்கு இலக்க (4D) எண்ணை, அந்த எண் மதிப்பின் எழுத்து வடிவத்திலேயே நேரடியாகப் பயன்படுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

அடுத்து, நான்கு இலக்க எண்ணை 24i விதிமுறைக்கு உட்படுத்தி அதன் மூலம் வரும் எண்களில் ஒரு எண்ணையோ, ஒரு சில எண்களையோ, அல்லது அனைத்து எண்களையுமோ அதிர்ஷ்ட எண்ணாக ஏற்று 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

நான்கு இலக்க எண்ணை நேரடியாகக் கூட்டினாலும், அதே நான்கு இலக்க எண்ணை 24i விதிமுறைக்கு உட்படுத்தி அதன் மூலம் வரும் நான்கு இலக்க எண்களைக் கூட்டினாலும் அவற்றின் ஒற்றையிலக்கக் கூட்டுஎண் ஒரே எண்ணாகவே வரும்.

உதாரணமாக, 6781 (ஆறாயிரத்து எழுநூற்று எண்பத்தி ஒன்று) என்ற எண்ணை நேரடியாகக் கூட்டினால், 6+7+8+1 = 22 = 2+2 = 4 என்ற ஒற்றை இலக்க எண் வருகிறது.

இந்த '6781' என்ற எண்ணையே 24i விதிமுறைக்கு உட்படுத்தினால் வரும் 24 எண்களில், அந்த ஒவ்வொரு எண் மதிப்புகளின் கூட்டுதலிலும் 4 (நான்கு) என்ற ஒற்றை இலக்க எண்ணே வரும், ஏனெனில் குறிப்பிட்ட அதே நான்கு எண்கள் தான், நான்கு இலக்கங்களிலும் இடம் மாறி வருவதால் கூட்டுத்தொகையின் ஒற்றையிலக்க எண்ணும் ஒரே எண்ணாகவே வரும்.

சந்தேகம் இருந்தால் 24i-ல் - 1678 என்ற எண்களுக்குரிய (-) பக்கத்தில் உள்ள எண்களைக்கூட்டிச் சரிபார்த்துக் கொள்ளவும்.

இந்த ஒற்றையிலக்கக் கூட்டு எண் விதிமுறை ‘1678’ என்ற நான்கிலக்க எண்ணுக்கு மட்டுமல்லாது, மொத்தம் உள்ள அனைத்து நான்கு இலக்க எண்களுக்கும், அவற்றை 24i விதிமுறைக்கு உட்படுத்தினால் வரும் அனைத்து எண்களுக்கும் மேற்கண்ட விதிமுறையே நடைமுறைக்கு வருகிறது.

நான்கு இலக்க எண்ணைப் பொறுத்தவரை அதிர்ஷ்டம் தரும் என்று நம்பக்கூடிய எண்ணைத் தேர்ந்தெடுத்து, அதே எண் மதிப்பின் எழுத்துவடிவத்திலோ அல்லது 24i விதிமுறைக்கு உட்படுத்தியோ 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

**15. IBOX ஒற்றை இலக்கக் கூட்டு எண்:-**

1i, 4i, 6i,12i, 24i -களில் வரும் எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கும் போது அந்த எண்களின் ஒற்றையிலக்கக் கூட்டு எண்ணையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1i விதிமுறைக்கு உட்படுத்திய எண்ணை கூட்டும்போது அந்த எண்ணின் மதிப்பிற்கேற்ப ஒரு ஓரிலக்க எண் வருகிறது.

4i விதிமுறைக்கு உட்படுத்திய எண்களைக் கூட்டும்போது அந்த எண்களின் மதிப்பிற்கேற்ப இரண்டு வகையான ஓரிலக்க எண்கள் வருகின்றன.

6i விதிமுறைக்கு உட்படுத்திய எண்களைக் கூட்டும்போது அந்த எண்களின் மதிப்பிற்கேற்ப ஒரு ஓரிலக்க எண் வருகிறது.

12i விதிமுறைக்கு உட்படுத்திய எண்களைக் கூட்டும்போது அந்த எண்களின் மதிப்பிற்கேற்ப மூன்று வகையான ஓரிலக்க எண் வருகின்றன.

24i விதிமுறைக்கு உட்படுத்திய எண்களைக் கூட்டும்போது அந்த எண்களின் மதிப்பிற்கேற்ப ஒரு ஓரிலக்க எண் வருகிறது.

## 16. 5D முதலான எண்களை 4D-யாக மாற்றும் விதம்

4D அதிர்ஷ்ட விளையாட்டில் ஈடுபடுவதற்கு நான்கு இலக்கங்கள் கொண்ட எண்களே தேவை. ஆனால் 5(5D), 6(6D), 7(7D), 8(8D)……. முதலான இலக்கங்கள் கொண்ட எண்களும் நமக்கு அதிர்ஷ்டம் தரும் எண்ணாக அமையும் என்று நாம் நம்பக் கூடும். எனினும் 5,6,7…. முதலான இலக்கங்கள் கொண்ட எண்களை எப்படி 4D எண்களாக மாற்றுவது என்று இதுவரை தெரியாமல் இருக்கக்கூடும். ஓரிலக்கம் (1), ஈரிலக்கம் (22), மூவிலக்கம் (333) எண்களை எப்படி 4D எண்களாக மாற்ற வேண்டும் என்ற விதிமுறைகளை 1 i ,4 i ,6 i ,12 i விதிமுறைகளில் அறிந்திருப்பீர்கள்.

5,6,7,8……. முதலான இலக்கங்கள் கொண்ட எண்களும் அதிர்ஷ்டம் தரும் எண்ணாக அமையும். அத்தகைய இலக்கங்கள் கொண்ட எண்களை எப்படி 4D எண்களாக மாற்ற வேண்டும் என்று ஆராய்ச்சி செய்ததில், சுழற்சிமுறை, சுருக்கமுறை ஆகிய இருவிதிமுறைகளை கண்டறிந்தேன்.

5,6,7,8……. முதலான இலக்கங்கள் கொண்ட எண்களை சுழற்சிமுறையில் அல்லது சுருக்கமுறையில் 4D எண்களாக மாற்றி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

சுழற்சிமுறை:

ஐந்து இலக்க (5D) எண்களை, 4D எண்ணாக மாற்றுவதற்கு, 5Dல் ஏதோ ஒரு இலக்க எண்ணைத் தவிர்த்துவிட்டு மற்ற நான்கு இலக்க எண்களை 4D எண்ணாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, 61428 (அறுபத்தோராயிரத்து நானூற்றி இருபத்தெட்டு) என்ற ஐந்திலக்க (5D) எண்ணில் ஏதேனும் ஒரு இலக்கத்தின் எண்ணைத் தவிர்த்துவிட்டு மற்ற எண்களைச் சுழற்சி முறைப்படி எழுதினால்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| i) | 6 | 1 | 4 | 2 | ~~8~~ | - | 6142 |
| ii) | 6 | 1 | 4 | ~~2~~ | 8 | - | 6148 |
| iii) | 6 | 1 | ~~4~~ | 2 | 8 | - | 6128 |
| iv) | 6 | ~~1~~ | 4 | 2 | 8 | - | 6428 |
| v) | ~~6~~ | 1 | 4 | 2 | 8 | - | 1428 |

என, ஐந்து வகையான 4D எண்கள் கிடைக்கும். இந்த ஐந்து வகையான எண்களையும் 4D ன் 1 i ,4 i ,6 i ,12 i , 24i, விதிமுறைகளுக்குட்படுத்தினால் மேலும் பல கூடுதலான 4D வகை எண்கள் கிடைக்கும்.

4D வகையில் கிடைக்கும் எண்களில் அதிர்ஷ்டம் தரும் என நாம் நம்பும் ஒரு எண்ணையோ, ஒருசில எண்களையோ அல்லது அனைத்து எண்களையுமோ தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

5D எண்களை, 4D சுழற்சி முறைக்கு உட்படுத்தி 4D எண்களாக்குவது போலவே 6D,7D,8D,9D,10D,11D,12D … முதலான எண்களையும் 4D சுழற்சி முறைக்கு உட்படுத்தி பலவிதமான 4D எண்களைப்பெறலாம்.

அவ்வாறு கிடைக்கும் 4D எண்களிலிருந்து அதிர்ஷ்டம் தரும் என நாம் நம்பும் ஒரு எண்ணையோ. ஒரு சில எண்களையோ, அல்லது அனைத்து எண்களையுமோ

தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பது அவரவரின் தனிப்பட்ட விருப்பமாகும்.

**சுருக்க முறை:**

5D,6D,7D,8D……முதலான எண்களை மற்றொரு முறையான சுருக்க முறையில் 4D எண்களாக மாற்றியும், 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

உதாரணமாக, 26,96,722 (இருபத்தாறு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எழுநூற்றி இருபத்தியிரண்டு) என்ற ஏழு (7D) இலக்க எண்ணை நமக்குரிய அதிர்ஷ்ட எண்ணாக நாம் கருதினால், அந்த ஏழு இலக்கங்களிலும் எத்தனை வகையான எண்கள் இருக்கின்றன என்பதைக் காணவேண்டும்.

2696722, என்ற ஏழு இலக்கங்களில் 2,6,9,7 என மொத்தம் நான்கு வகையான எண்கள் இடம்பெறுகின்றன. 2,6,9,7 என்ற இந்த நான்கு எண்களையும் நாம்விரும்பியவாறு எண்களின் இலக்கத்தை மாற்றி நேராகவோ அல்லது 4D-ன் 24i-விதிமுறைக்கு உட்படுத்தியோ 4D அதிர்ஷ்டவிளையாட்டில் பங்கேற்கலாம்.

நான்கு இலக்கங்களுக்கும் (4D) அதிகமாக இலக்கங்கள் கொண்ட எண்களை, 4Dஎண்களாக சுழற்சி முறையில் மாற்றும் போது அதிகமான 4Dஎண்கள்கிடைக்கும். ஆனால், சுருக்க முறையில் மாற்றும் போது குறைவான 4Dஎண்கள் கிடைக்கும்.

சுருக்க முறையில் கிடைக்கும் அனைத்து 4Dஎண்களும் சுழற்சிமுறையில் கிடைப்பதோடு, சுழற்சி முறையில் சில கூடுதலான 4Dஎண்களும் கிடைக்கும்.

சுழற்சிமுறை மற்றும் சுருக்கமுறைகளில் கிடைக்கும் எண்களைக் கொண்டு பரிசோதனை முயற்சியாக 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றபோது சில முறை பரிசுத் தொகைகளை நானும்…. நம் நண்பர்களும் பெற்றிருக்கிறோம்.

எந்த முறையில் 4D அதிர்ஷ்டஎண்கள் கிடைத்தாலும் எண்களை அதிர்ஷ்டம் தரும் என நம்பி விரும்பி, தேர்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பது அவரவரின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததேயாகும்.

## 17. யாருமே தேர்ந்தெடுக்காத எண் பரிசுக்குரிய எண்ணாக அமையும்.

4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் ‘முதல் பரிசு’ முதல் ‘ஆறுதல் பரிசுகள்’ முடிய மொத்தம் ‘23’ எண்கள் தான் பரிசுக்குரிய அதிர்ஷ்ட எண்களாக அறிவிக்கப்படுகின்றன.

பரிசுக்குரிய 23எண்களும் மொத்தமுள்ள பத்தாயிரம் (10,000) 4D எண்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுகின்றன.

ஆம்! ‘4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க நாம் தேர்ந்தெடுக்கும் ஒரு எண்ணோ, ஒரு சில எண்களோ, அதிர்ஷ்ட பரிசுகளுக்குரிய ‘23’ எண்களுடன் போட்டிப்

போடுவதில்லை. மொத்தமுள்ள பத்தாயிரம் (10,000) 4D எண்களுடன் போட்டிப் போட்டு அதிர்ஷ்டப் பரிசுக்குரிய '23' எண்களில் இடம் பெறுகின்றன.

அதிர்ஷ்ட பரிசுக்குரிய '23' எண்களும் வெவ்வேறு எண்களாக அமையவும் வாய்ப்பிருக்கிறது….. அல்லது ஒரே எண்ணானது ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுத் தொகைக்குரியதாகவும் அமைய வாய்ப்பிருக்கிறது.

சிலர், தாம் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்ற குறிப்பிட்ட எண், பரிசுக்குரிய '23' எண்களில் ஒரு எண்ணாக அமைய மாட்டேன்கிறதே என்று வருத்தப்படுவதுண்டு.

சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட எண்களைத்தேர்ந்தெடுத்து, மேலும் ஐம்பது (50)… நூறு (100)….. எனவும் அதற்கு மேலும் எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதும் உண்டு. அதிகமான எண்களில் ஒரு எண்கூட அதிர்ஷ்ட எண்ணாக வரவில்லையென்றால் அவர்களின் மனநிலையை, பொருளாதார நிலைமையை எப்படிச் சொல்வது.

குறிப்பிட்ட ஒரு எண்ணை மட்டும் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்று முதல்பரிசு வென்றவர்களும் உண்டு. பல வகையான 4D எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்று 'முதல் பரிசு முதல் - பத்து (10) ஆறுதல் பரிசுகள் வரை மொத்தமுள்ள 23 பரிசுகளில் ஒரு (1) பரிசு கூட பெறாதவர்களும் உண்டு என்பது தெரியவருகிறது.

4D—ல் மொத்தமுள்ள பத்தாயிரம் (10,000) எண்களும், 4D— அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறதா? என்றால், ஆம்! என்றும் சொல்ல முடியாது… இல்லையென்றும் சொல்ல முடியாது. இது சிந்தனைக்குரிய, ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும். ஒரு வேளை 4D— அதிர்ஷ்ட விளையாட்டை நடத்தும் நிறுவனம் வேண்டுமானால் இந்த ஆய்வுச் சிந்தனையின் விளைவாக இனிமேல் கணக்கெடுக்கத் தொடங்கலாம்.

4D— அதிர்ஷ்ட விளையாட்டில் சில நாள் நாமும், மற்றவர்களும் தேர்ந்தெடுத்து பங்கேற்ற எண் எவ்வாறு அதிர்ஷ்ட எண்ணாக அமைய வாய்ப்பில்லையோ, அதற்கு நேர்மாறாக நாமோ, மற்றவர்களோ, யாருமே தேர்ந்தெடுக்காத எண் அதிர்ஷ்ட எண்ணாக அமையவும் வாய்ப்பிருக்கிறது. என்ன ஆச்சர்யமாக இருக்கிறதா? ஆச்சர்யப்பட்டுதான் ஆக வேண்டும்… ஆமாம்… மீண்டும் சொல்கிறேன்….. நாமோ…. மற்றவர்களோ, யாருமே தேர்ந்தெடுக்காத எண் 4D— அதிர்ஷ்ட விளையாட்டில் அதிர்ஷ்ட எண்ணாக அமைய வாய்ப்பிருக்கிறது.

எப்படியெனில், மொத்தமுள்ள பத்தாயிரம் (10,000) 4D– எண்களையுமே நாம் அனைவரும் அதிர்ஷ்ட எண்ணாகத் தேர்ந்தெடுத்து, 4D– அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கிறோமா? என்பது கணக்கெடுப்பு நடத்த வேண்டிய விஷயமாகும்.

எனக்குத் தெரிந்தவரை, எனது அனுபவத்தைப் பொறுத்தவரை இதுவரை எத்தனையோ எண்…. அல்லது ஏதேனும் ஒரு எண்ணாவது விடுபட்டுப் போயிருக்கும் என்பது அனுமானமாகும். விடுபட்டிருக்குமா?..... விடுபட்டிருக்காதா? என்பதை நானும், நீங்களும் கண்டுபிடித்துவிட முடியாது 4D– அதிர்ஷ்ட விளையாட்டை நடத்தும் நிறுவனங்களின் கணக்கெடுப்பில்தான் தெரியவரும். இதுவரை இத்தகைய ஆராய்ச்சி நோக்கிலான கணக்கெடுப்பு நடந்திராவிட்டாலும், இனி நடக்க வாய்ப்பிருக்கிறது.

விடுபட்ட எண் சம்பந்தபட்ட கணக்கெடுப்பு நடத்தினால், 4D– அதிர்ஷ்ட விளையாட்டில் சில புதிய விதிமுறைகளை உண்டாக்கி…. பின்பற்ற வேண்டிவரும்.

யாருமே தேர்ந்தெடுத்து 4D– அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்காத ஒரு எண், அன்றைய தினத்தில் பரிசுக்குரிய எண்ணாக அமைந்தால். அந்த பரிசுத் தொகையை 4D– அதிர்ஷ்ட விளையாட்டு நிறுவனம் யாரிடம் கொடுக்கும், அந்தப் பரிசுத்தொகை என்னவாகிறது என்பதற்கெல்லாம் விடைகாண வேண்டும்.

யாருமே தேர்ந்தெடுக்காத எண்ணைத் தவிர்த்துவிட்டு 4D– அதிர்ஷ்ட விளையாட்டு போட்டியையும் நடத்த முடியாது. ஏனெனில் சுழியம் (0) முதல் - ஒன்பது (9) வரை மொத்தமுள்ள பத்து (10) எண்களில் தான், நாம் நமக்குப் பிடித்த நான்கு இலக்க எண்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அதிலும் நாம் தேர்ந்தெடுப்பது நான்கு இலக்க எண்களாக இருக்கும், ஆனால் 4D– அதிர்ஷ்ட விளையாட்டு நிறுவனம் நாமும், நம்மை போன்ற மற்றும் பலரும் தேர்ந்தெடுத்த நான்கிலக்க(4D) எண்களையோ…. அல்லது ஒட்டு மொத்தமாக உள்ள பத்தாயிரம் (10,000) 4Dஎண்களையோ நேரடியாகப் பயன்படுத்தி அதிர்ஷ்ட பரிசுக்குரிய எண்களைத் தேர்ந்தெடுப்பதில்லை.

பிறகு, எப்படி அதிர்ஷ்ட பரிசுக்குரிய எண்களை 4D– அதிர்ஷ்ட நிறுவனம் தேர்ந்தெடுக்கிறது என்றால், நான்கு இலக்கங்களாக…. நான்கு உருளைகளை வைத்து…. அந்த ஒவ்வொரு உருளையிலும் சுழியம் (0) முதல் - ஒன்பது (9) வரையுள்ள எண்களை ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக எழுதி, போட்டியின் போது உருளைகளை உருள விடுகின்றனர். மெதுவாக… வேகமாக… மெதுவாக… என வேகத்தைக் கூட்டிக் குறைத்து உருளும் உருளைகளை சில நொடிகளில் உருளா… நிலையில் நிற்க செய்கின்றனர். நின்ற… அசையா…. நிலையில் உள்ள நான்கு உருளைகளிலும் என்னென்ன எண்கள் இடம் பெருகின்றனவோ, அந்த நான்கு எண்களின் எண் மதிப்பு பரிசுக்குரிய எண்ணாக அமைகிறது.

உதாரணமாக, உருளைகள் உருண்டு நின்ற நிலையில்.... இடது புறமிருந்து

முதல் இலக்கத்தில் (ஆயிரத்தின் இலக்கம்) உள்ள உருளையில் மூன்று (3) என்ற எண்ணும்,

இரண்டாவது இலக்கத்தில் (நூறின் இலக்கம்) ஐந்து (5) என்ற எண்ணும்,

மூன்றாவது இலக்கத்தில் (பத்தின் - இலக்கம்) இரண்டு (2) என்ற எண்ணும்,

நான்காவது இலக்கத்தில் (ஒன்றின் - இலக்கம்) ஒன்று (1) என்ற எண்ணும் அமைந்தால் 3521 (மூவாயிரத்து ஐந்நூற்று இருபத்தி ஒன்று) என்ற எண்மதிப்பு பரிசுக்குரியதாக அமைகிறது.

| | | | |
|---|---|---|---|
| (3) | ( ) | ( ) | ( ) |
| (3) | (5) | ( ) | ( ) |
| (3) | (5) | (2) | ( ) |
| (3) | (5) | (2) | (1) |

இதை போலவே, எண்கள் உள்ள உருளைகளை உருளவிட்டு, உருளை நின்ற நிலையில் உள்ள எண்களை, எண் மதிப்புகளாக்கி பரிசுக்குரிய எண்களாக அறிவிக்கப்படுகின்றன.

இதனால் 4D– அதிர்ஷ்ட விளையாட்டில் யாருமே தேர்ந்தெடுக்காத எண், உருளைகளின் மூலம் பரிசுக்குரிய எண்ணாக அமைந்தால், அந்த எண்மதிப்புக்குரிய பரிசுத்தொகையை என்ன செய்வதென்று 4D– அதிர்ஷ்ட விளையாட்டு நிறுவனமும், அரசாங்கத் தரப்பினரும், பொது மக்களின் பிரதிநிதிக் குழுவினரும் கலந்தாலோசித்து ஒருமித்த முடிவெடுத்துச் செயல்படுத்த வேண்டும்.

## 18. இது வரை பரிசுக்குரியதாக அமையாத எண்கள்

நாமும், மற்றவர்களும் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டுகளில் பங்கேற்ற 4D எண்களில் இதுவரை ஒருசில எண்களாவது, அல்லது ஒரு எண்ணாவது அதிர்ஷ்ட பரிசுக்குரிய எண்ணாக அமைந்திருக்காது என்றும் அனுமானிக்கத் தோன்றுகிறது.

இந்த அனுமானச் சிந்தனைகளை எழுதிக் கொண்டிருக்கும்போதே, இந்த ஆய்வுச் சிந்தனையை நிரூபிக்கும் வகையில், ஆய்வுச் செயல்பாட்டில் ஈடுபட எண்ணம் தோன்றியது.

அதன் விளைவாக 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இருவாரங்களில் ஒரு 4D அதிர்ஷ்ட விளையாட்டு நிறுவனத்தின் அகப்பக்கத்திற்குச் (வெப்சைட்)

சென்று ஆராய்ச்சி மேற்கொண்ட போது பத்துக்கும் (10) மேற்பட்ட எண்கள் 18.06.2008 வரை ஒருமுறை கூட பரிசுக்குரிய எண்ணாக அமையவில்லை.

ஒருமுறை கூட முதல்பரிசு முதல் - ஆறுதல்பரிசு முடிய எந்தப் பரிசுக்கும் உரிய எண்ணாக அமையாத பத்துக்கும் மேற்பட்ட எண்களை, நானும் நம் நண்பர்களும் பெருந்தன்மையோடு அதிர்ஷ்ட எண்ணாகப் பாவித்து 21.06.2008 அன்று Sports TOTO–வின் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றோம் அதற்கு முன் ஒருமுறை கூட பரிசுக்குரிய எண்ணாக அமையாத '5256' என்ற எண் ஆறுதல் பரிசுக்குரிய எண்ணாக அமைந்தது.

Sports TOTO-வின் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் இதுவரை (இந்தப் புத்தகம் அச்சேறும் தேதிவரை……………………………) ஒருமுறை கூட அதிர்ஷ்ட எண்ணாக அமையாத எண்களாவன.

……………………………………

…………………………………..

மேற்கண்ட எண்களை, அதிர்ஷ்ட எண்களாகக் கருதி நானும் பல முறை Sports TOTO -4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றேன். ஆனால் இதுவரை (இந்த புத்தகம் அச்சேறும் தேதிவரை ……………………..) ஒருமுறைகூட அதிர்ஷ்ட பரிசுக்குரிய எண்ணாக அமையவில்லை.

இதுவரை ஒருமுறை கூட பரிசுக்குரிய எண்ணாக அமையாத எண்களை, அதிர்ஷ்ட எண்ணாகத் தேர்ந்தெடுத்து ஒருமுறையோ அல்லது பல முறைகளோ, ஒரு மடங்கிலோ அல்லது பல மடங்குகளிலோ 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றவர்களின் நிலைமை என்னவாகியிருக்கும். அதிர்ஷ்டம் சம்பந்தப்பட்ட அவர்களின் நம்பிக்கை என்னவாகியிருக்கும்?

நமக்குப்பிடித்த எண் என்றும், நமது அன்றாட பயன்பாட்டில் தொடர்புடைய எண் என்றும், ஏதோ ஒரு எண்ணை, ஒருசில எண்களை மட்டுமே தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதின் விளைவுகளை யோசித்து…. மேற்கொண்டு செயல்படவும்.

நமக்கு அதிர்ஷ்டம் உண்டாகும் வாய்ப்பு இருந்தால் நாம் எந்த எண்ணைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும், நாம் தேர்ந்தெடுத்து பங்கேற்ற எண் பரிசுக்குரிய எண்ணாக அமையும், நாமும் அதிர்ஷ்டசாலியாக மாறுவோம்.

நமக்கு அதிர்ஷ்டத்தின் மேல் நம்பிக்கை இல்லாத போதிலும், அதிஷ்ட தேவதை தன் கடைக்கண் பார்வைகூட நம்மீது பட்டுவிடக்கூடாது என்று பாராமுகமாய் இருக்கும் போதும், நாம் எத்தனை எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும் நம் எதிர்பார்ப்பு நிறைவேறாது.

பொதுவாக, நாம் அதிர்ஷ்ட போட்டிகளின் மூலம் அதிர்ஷ்டத்தை அனுபவிப்பதற்கு,

முதலில் நாம் அதிர்ஷ்டத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இரண்டாவது போட்டிகளில் பங்கேற்க வேண்டும்,

மூன்றாவது அதிர்ஷ்ட தேவதையின் பேரருள் நமக்கு உண்டாக வேண்டும். இந்த மூன்றும் ஒருங்கிணைந்தால் நாம் அதிர்ஷ்டசாலியாவோம்.

## 19. அதிர்ஷ்டமாவது மண்ணாவது:-

அதிர்ஷ்டத்தின் மேல் நமக்கு எந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கிறதோ, அதே அளவுக்கு, அந்த அளவுக்கும் மேல் கூட நம்பிக்கையின்மையும் இருக்கிறது.

அதிர்ஷ்டத்தின் மீது நம்பிக்கைக் கொண்டும், அதிர்ஷ்டத்தின் மீது நம்பிக்கையின்றியும் பல பழமொழிகள் நம்மிடையே புழக்கத்தில் உள்ளன. அந்த வகையில்,

‘என்னதான் விளக்கெண்ணையை உடலில் தடவிக் கொண்டு வீதிமண்ணில் விழுந்து….. உருண்டு…. புரண்டாலும் ஒட்டுகிற மண்தான் ஒட்டும்’ என்ற பழமொழியாம்….. அனுபவ மொழிக்கும் நாம் சொந்தக்காரர்கள்.

இதுபோன்ற கூற்றுகளெல்லாம் அதிஷ்டத்தின் மீதுள்ள நம்பிக்கையை மறுபரிசீலனைச் செய்யச் சொல்கின்றன. நாம் தான் மறுக்காமல் நேர்மறையாகவும் சிந்திக்க வேண்டும்….. எதிர்மறையாகவும் சிந்திக்க வேண்டும்; பிறகு ஏதோ ஒரு சிந்தனையின்படி செயல்பட வேண்டும்.

அதிர்ஷ்டம் சம்பந்தமாக செயல்படுவது தான் நமது பொறுப்பு… கடமை; செயல்பாட்டுக்குரிய பலனைத் தருவது அதிர்ஷ்ட தேவதையின் தீர்ப்பு…. உரிமையாகும்.

## 20. அதிர்ஷ்டம் என்பதெல்லாம் பொய்யா? மெய்யா?

அதிர்ஷ்டம் என்பதெல்லாம் சுத்தப்பொய். முயற்சியும், உழைப்பும், திறமையும் தான் முன்னேற்றத்துக்குக் காரணமாகும் என்ற நம்பிக்கைப் பலரிடமும் உண்டு.

ஏனெனில், எல்லோராலும் முயற்சி செய்ய முடியும்….. எல்லோராலும் திறமையுடன் செயல்பட முடியும்…. எல்லோராலும் உழைக்க முடியும் என்பதால் அதிர்ஷ்டம் என்பதெல்லாம் சுத்த பொய் என்று சொல்வதுண்டு. இந்தக் கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன்…. ஒப்புக் கொள்கிறேன். ஆமாம்.. எல்லோராலும் எல்லாம் முடியும். ஆனால்...?

ஆம்..? நன்னம்பிக்கையாளர்களும்… தன்னம்பிக்கையாளர்களும், அதிர்ஷ்டம் பற்றிய எனது மாற்றுக் கோண கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எல்லோராலும் எல்லாம் முடியும்… ஆனால் எல்லோராலும் அதிர்ஷ்டசாலியாக முடியுமா? எல்லோரும் அதிர்ஷ்டசாலியாகிவிட முடியாதல்லவா?, யாரோ ஒருவரோ…. ஒரு சிலரோ தான் அதிர்ஷ்டசாலியாக முடியும்.

‘அதிர்ஷ்டம் என்பதெல்லாம் பொய்’ என்று எந்த அளவுக்கு வாதாட முடியுமோ, அதே அளவுக்கு…….. அந்த அளவுக்குக் கூடுதலாகக் கூட ‘அதிர்ஷ்டம் என்பது மெய்’ என்று வாதாடவும் முடியும். இந்த வாத....... பிரதிவாதங்களில் கூட திறமையுடன் வாதாட முடியுமே தவிர, அதிர்ஷ்டம் இருந்தால் தான் வெற்றிக் கானத் தீர்ப்பை பெற முடியும்.

**21. அதிர்ஷ்டம் Vs துரதிர்ஷ்டம்**

‘அதிர்ஷ்டம் என்பதற்கு அது தானாக இஷ்டப்பட்டு நம்மை வந்தடைவது’ என்று பொருள் கண்டோம். அதிர்ஷ்டம் என்பதற்கு இந்த கருத்தையே நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்மவர்களும் இந்த கருத்தையே ஏற்றுக் கொள்கிறார்கள். நானும் பலவித அனுபவ, ஆராய்ச்சிகளுக்குப்பின் இந்த கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

துரதிர்ஷ்டம் என்பதற்கு, அதிர்ஷ்டத்தை அனுபவிக்க முடியாமலும், அதிர்ஷ்டத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியாமலும், அதிர்ஷ்ட தேவதையின் பாராமுகமும் போன்ற நிகழ்வுகளை குறிப்பதாக பொருள் கொள்ளப்படுகிறது.

துரதிர்ஷ்டம் சம்பந்தப்பட்ட இந்தக் கருத்துப் பொருளில் நம்மவர்களுக்கும், தங்களுக்கும் எந்த அளவுக்கு உடன்பாடிருக்கிறது என்பது அவரவர் எண்ணத்தைப் பொறுத்தது.

ஆனால், துரதிர்ஷ்டம் சம்பந்தப்பட்ட இந்தக் கருத்துப் பொருளில் எமக்கு உடன்பாடில்லை. ஏனெனில், அது தானாக இஷ்டப்பட்டு வருவதை அதிர்ஷ்டம் என்பதால், அது தானாக இஷ்டப்பட்டு வராததை துரதிர்ஷ்டம் என்று சொல்லிவிட முடியாது.

எமது அனுபவத்தில் துரதிர்ஷ்டம் என்பது, நாம் தாமாக முன் சென்று அதிர்ஷ்டத்தை அனுபவிக்க விரும்பாததும்….

அதிர்ஷ்டம் நம்மைத் தேடிவரும் வழிகளில் செயல்படாததும்…..

அதிர்ஷ்ட தேவதை தானாகவே விரும்பி நம்மை அதிர்ஷ்டத்தில் திளைக்க வைக்க முன் வந்தாலும்… நாம் பின்னோக்கியே சென்று விடுவதும்,

எவ்வழியிலும்…. எவ்வகையிலும்….. அதிர்ஷ்ட தேவதை நம்மை அணுகாதவாறு தம்மை சுற்றி துரதிர்ஷ்டச் சுவர்களை எழுப்பிக் கொள்வதும்,

அதிர்ஷ்டம் வரும் வழிகளான அதிர்ஷ்டம் சம்பந்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடாமல் போவது போன்ற நிகழ்வுகளேயாகும்.

ஆக ‘அது தானாக இஷ்டப்பட்டு நம்மை தேடிவருவதை அதிர்ஷ்டம்’ என்று கருதுவது போல, நாம் தானாக இஷ்டப்பட்டு அதிர்ஷ்டத்தைத் தேடிப் போகாததே துரதிர்ஷ்டம் ஆகும்.

## 22. பேராசை பெருநஷ்டம்

4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் உள்ள பலவிதிமுறைகளில் ஒரு எண்ணை மட்டுமே தேர்ந்தெடுத்து குறிப்பிட்ட பல மடங்குக்குப் போட்டியிடலாம் என்ற ஒரு விதியும் இருக்கிறது.

இந்த விதிதான் அதிர்ஷ்டப் போட்டிகளில் பங்கேற்பவர்களை பேராசைக் காரர்களாக்கி பெருந்தனவந்தராகவும் ஆக்குகிறது, சிலநேரம் பெரும் நஷ்டத்துக்குள்ளாக்கவும் செய்கிறது.

இவர்கள் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்ற ஒரு எண் அன்றைய தினத்தில் அதிர்ஷ்டபரிசுக்குரிய எண்ணாக அமைந்துவிட்டால், எத்தனை மடங்குக்குப் போட்டிக் கட்டணம் செலுத்தினார்களோ, அத்தனை மடங்கிற்குப் பரிசுத்தொகைக் கிடைக்கிறது. அதே நேரம் இவர்கள் தேர்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்ற எண் அதிர்ஷ்டபரிசுக்குரிய எண்ணாக அமையாவிட்டால் அவர்களின் பன்மடங்கு போட்டிக்கட்டணப் பணம் நஷ்டமாகிறது.

ஒரே எண்ணைத் தேர்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பல மடங்குக்குப் போட்டியிட்டு வெற்றியை அல்லது தோல்வியைச் சந்திப்பதா?

அல்லது, பல எண்களைத் தேர்ந்தெடுத்து ஒரு மடங்கின் மூலமே பங்கேற்று வெற்றியை அல்லது தோல்வியைச் சந்திப்பதா என…. நாம் தான் சிந்தித்து செயல்பட வேண்டும்

பல எண்களைத் தேர்ந்தெடுத்து ஒருமடங்கின் மூலம் பங்கேற்கும் போது அதில் ஏதோ ஒரு எண்ணாவது அதிர்ஷ்ட பரிசுக்குரிய ‘23’ எண்களில் ஒரு எண்ணாக வர வாய்ப்பிருக்கிறது. அதேநேரம் நாம் தேர்ந்தெடுத்த அனைத்து எண்களுமே அதிர்ஷ்ட பரிசுக்குரிய எண்ணாக அமையாமல் போகவும் வாய்ப்பிருக்கிறது.

ஒரு எண்ணை பன்மடங்கு தேர்ந்தெடுத்து பங்கேற்கும் விதிமுறை இருப்பது போல், ஒருவரே பல எண்களைத் தேர்ந்தெடுத்து பங்கேற்கும் விதிமுறையும் இருக்கிறது.

இந்த இரு விதிமுறைகளையுமே கடைபிடித்து அதிர்ஷ்டசாலியானவர்களும் உண்டு. மாறாக துரதிர்ஷ்டசாலியானவர்களும் உண்டு.

நாம் தான் சிந்தித்து….. அதிர்ஷ்ட தேவதையை வேண்டிக்கொண்டு அதிர்ஷ்ட போட்டிகளில் பங்கேற்க வேண்டும்.

அதிர்ஷ்டசாலியாக ஆவதற்கு விண்ணப்பிப்பதுதான் நமது கடமை… அதிர்ஷ்டசாலியாக அங்கீகரிப்பது அதிர்ஷ்ட தேவைதையின் கருணையைப் பொறுத்தது.

## 23. அதிர்ஷ்டத்தை அடையமுடியுமா?

என்னதான் நாம் நல்ல நேரம் பார்த்து….. நல்ல காலம் பார்த்து… ஜாதகம் பார்த்து…. சகுனம் பார்த்து… எண்கணிதம் பார்த்து…. யோசித்து… சிந்தித்து….. ஆலோசித்து 4D – அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும், நமக்கு அதிர்ஷ்டம் உண்டாவதென்பது, அதிர்ஷ்ட தேவதை நம்மைப் பார்க்கும் கருணைப் பார்வையைப் பொறுத்ததேயாகும்.

சிலர் கனவு கண்டு…. அந்தக் கனவு நிகழ்ச்சிகளில் வரும் எண்களைக் கொண்டு…. அல்லது கனவு நிகழ்ச்சிகளோடு எண்களைச் சம்பந்தப்படுத்தி அந்த எண்களைக் கொண்டு 4D– அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதுண்டு. இப்படி கனவு கண்டு பங்கேற்றாலும் அதிர்ஷ்ட தேவதையிடம் நாம் நினைவு படுத்திக் கொண்டே இருந்தால் தான் அல்லது அதிர்ஷ்ட தேவதையின் நினைவில் நாம் இருந்தால் தான் நாம் பரிசுக்குரியவர்களாக மாற முடியும்.

அவரவர் மதம் சார்ந்த வழிபாடுகளில் ஈடுபட்டு, இன்று அதிர்ஷ்டம் நமக்குத் தான் என்று 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கு கொண்டாலும், அதிர்ஷ்ட தேவதை மனது வைத்தால் தான் அதிர்ஷ்டத்தை அனுபவிக்க முடியும்.

கையில்…. பையில், காசு….. பணம் இருக்கிறதே; காசு பணம் அதிகமாக புழங்குகிறதே என்று நினைத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும் அதிர்ஷ்ட தேவதை இஷ்டபட்டால்தான் நாம் அதிஷ் சாலியாக முடியும்.

கையில்…. பையில், காசு…. பணம் நடமாட்டமே இல்லை என்றும் கையில் இருக்கிற கடைசி கசைக்கூட அதிர்ஷ்டத்தை நம்பி விதைக்கிறேன் என்று 4D அதிர்ஷ்ட விளைாட்டில் பங்கேற்றாலும் அதிர்ஷ்ட தேவதையின் திருவருள் இருந்தால் தான், அதிர்ஷ்டத்தின் மூலம் பெரும்பொருள் பெறமுடியும். இல்லையேல்……

கடன்பட்டு 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும், அதிர்ஷ்ட தேவதை நமக்கு உடன்பட்டு வராவிட்டால் நாம் அதிர்ஷ்டசாலியாக முடியது.

'இன்று நமக்கு அதிர்ஷ்டம் உண்டாகியேதீரும்' என்று அசாத்தியமான நம்பிக்கையுடனோ, மற்றும் அதிர்ஷ்டத்தின் மீது துளியளவு கூட நம்பிக்கையில்லாமலோ 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும், அதிர்ஷ்ட தேவதை நம்மேல் நம்பிக்கை வைத்தால் போதும் நாம் அதிர்ஷ்டசாலியாகிவிடுவோம்.

ஆக, நாம் என்ன தான் கணித்து…. அனுமானித்து…. யூகித்து….. சிந்தித்து….. ஆலோசித்து….. ஆராய்ச்சி செய்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும், நம்மை அதிர்ஷ்டசாலியாக்குவது அதிர்ஷ்ட தேவதையின் பேரருள் பெருங்கருணையாகும்.

## 24. அதிர்ஷ்டத்தை தவிர்க்க முடியுமா?

சிலர், ஏதோ ஒரு எண்ணையோ… ஒரு சில எண்களையோ கூறி, இன்று இந்த எண்கள் 4D அதிர்ஷ்ட விளையாட்டில், அதிர்ஷ்ட எண்களாக…. பரிசுக்குரிய எண்களாக அமையும் என்றும்…. தமது கணிப்பு பலிதமாகும் என்றும் மற்றவர்களிடம் கூறுவார்கள்.

பரிசுக்குரிய எண்ணாக அமையும் என்று அவர் கணிக்கும் எண்களை நம்பி, அவர் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும் பங்கேற்பார் அல்லது பங்கேற்காமலும் போவார். அதேபோல் இவருடைய பேச்சை, கணிப்பைக் கேட்ட மற்றவர்களும் பங்கேற்றாலும் பங்கேற்பார்கள் அல்லது பங்கேற்காமலும் தவிர்ப்பார்கள்.

இவரோ… மற்றவர்களோ, குறிப்பிட்ட அதிர்ஷ்ட எண்களை நம்பி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்று, அன்றைய தினம் அந்த குறிப்பிட்ட எண்கள் பரிசுக்குரிய அதிர்ஷ்ட எண்களாக அமைந்தால் பங்கேற்றவர்களுக்கெல்லாம் லாபம்தான். அந்த குறிப்பிட்ட எண்கள் 4D அதிர்ஷ்ட விளையாட்டடில் பரிசுக்குரிய எண்ணாக அமையாவிட்டால் பங்கேற்றவர்களுக்கெல்லாம் நஷ்டம்தான். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இந்ததெரிந்த விஷயத்தை ஏன் சொல்கிறேன் என்றால்…. தேரியாத விஷ யத்தையும்…. தவிர்க்க முடியாத விஷயத்தையும் சொல்லுவதற்கே மேற்கண்ட தெரிந்த விஷயத்தைச் சொன்னேன்.

சரி, ஒருவர் ஏதோ ஒரு எண்ணையோ, ஒரு சில எண்களையோ 4D அதிர்ஷ்ட விளையாட்டில், அதிர்ஷ்ட எண்களாக, பரிசுக்குரிய எண்களாக அமையும் என்றும், தமது

கணிப்பு பலிதமாகும் என்றும் மற்றவர்களிடம் கூறிவிட்டு தானும் மற்றவர்களும் அந்த எண்களைப் பயன்படுத்தி 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்காமல் இருந்துவிட்டு, அன்றைய 4Dஅதிர்ஷ்ட விளையாட்டு போட்டிகளின் முடிவுகளின் போது மேற்குறிப்பிட்ட அந்த நபர் கணித்த எண், பரிசுக்குரிய எண்ணாக அமைந்துவிட்டால் 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்காததால் இவர்களின் மனம் என்னபாடுபடும். அதிர்ஷ்டம் கைவிட்டுப் போச்சே என்றும், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்றும் தங்களையே நொந்துகொள்வார்களல்லவா?

இப்படி அதிர்ஷ்டத்திற்குரிய எண்ணை கணித்தும்... அனுமானித்தும் அந்த எண்ணின் மூலம் 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்காமலும், பரிசுத்தொகையைப் பெறமுடியாமலும் போகிறதோ, நமது மனமும், எண்ணமும், செயல்பாடும் துரதிர்ஷ்டசாலியாக்குகிறதோ, அதேபோல, அதற்கு நேர்மாறாக நாம் அதிர்ஷ்ட சாலியாவதையும் யாராலும் தடுக்கமுடியாது... தவிர்க்கமுடியாது.

ஆமாம், நமக்கு வரக்கூடிய அதிர்ஷ்டத்தை நாம் தடுக்கவும்முடியாது... தவிர்க்கவும் முடியாது.

நாம் அதிர்ஷ்டத்தை அனுபவித்தேயாக வேண்டும் என்று நமது விதியிலிருந்தால் அல்ல (அல்லது) மதியிலிருந்தால் நாம் அதிர்ஷ்டத்தை அனுபவித்தே ஆகவேண்டும்..... அனுபவிப்போம்.... வேறு வழியேயில்லை.... அதிர்ஷ்டம் வரும் வழிகளைத் தடுக்கவும் முடியாது.... அதிர்ஷ்டத்தை அனுபவிக்காமல் தவிர்க்கவும் முடியாது. ஆக நாம் அதிர்ஷ்டசாலியென்று பெரும் பொருளோடும், பேரும் புகழோடும் வாழ்ந்தேயாக வேண்டும்.

அதிர்ஷ்டசாலியாவதற்கு நாம் ஆசைப்பட வேண்டும்; ஆமாம்...நாம் ஆசைப்பட்டால் தான் அதிர்ஷ்டசாலியாகமுடியும். அதற்காக பேராசைப்பட்டுவிடக் கூடாது. பேராசை பெருநஷ்டத்தைத்தான் உண்டுபண்ணும்.

ஆசை என்பது ஒரு எண் அல்லது ஓரிரு எண்களைத் தேர்ந்தெடுத்து ஒரு மடங்குப்போட்டித்தொகையிலேயே 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதாகும். இதில் நாம் குறைந்த அளவு தான் ஆசைப்படுகிறோம். நாம் தேர்ந்தெடுத்த எண் பரிசுக்குரிய எண்ணாக அமையாவிட்டாலும் நமக்கு பெரிய அளவில் பண நஷ்டம், பணஇழப்பு ஏற்பட்டு விடாது.

பேராசை என்பது ஒரு எண்ணையோ.... பல எண்களையோ தேர்ந்தெடுத்து பலமடங்குப்போட்டித் தொகையில் 4D அதிர்ஷ்டவிளையாட்டில் பங்கேற்பதாகும். இதில் போட்டியில் பங்கேற்கும் போதே பேராசையோடுதான் பங்கேற்கிறோம். நாம் தேர்ந்தெடுத்த எண் பரிசுக்குரிய எண்ணாக அமைந்தால் நமது பேராசை நம்மைக் காப்பாற்றும். மாறாக நாம் தேர்ந்தெடுத்த எண் பரிசுக்குரிய எண்ணாக அமையாவிட்டால் நமக்குத்தான் பன்மடங்குப் போட்டி கட்டணப் பணநஷ்டம், பண இழப்புகள்

உண்டாகும். இப்போது நமது பேராசை நம்மை பெருநஷ்டத்துக்குள்ளாக்கி அடுத்தடுத்து கஷ்டத்தை உண்டு பண்ணிவிடும்.

நமக்கு அதிர்ஷ்டப் பரிசுத்தொகைக் கிடைக்கும் என்றிருந்தால் நாம் ஒரு எண்ணைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும், பல எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்றாலும், நாம் தேர்ந்தெடுத்து பங்கேற்ற எண் பரிசுக்குரிய எண்ணாக அமைந்து நாம் அதிர்ஷ்டசாலியாவோம். எனவே அதிர்ஷ்டசாலியாவதற்கு ஆசைப்படுவோம், பேராசை படுவதைத் தவிர்ப்போம்.

நாம் அதிர்ஷ்டசாலியாக வேண்டுமென்றால் அதிர்ஷ்டம் சம்பந்தப்பட்ட போட்டிகளில் ஈடுபடவேண்டும். அதிர்ஷ்டப்போட்டிகளில் பங்கேற்பது என்பது நுழைவுச்சுற்று, தகுதிச்சுற்றுத் தேர்வுகள் போலவாகும்.

நாம் அதிர்ஷ்டப் போட்டிகளில் பங்கேற்று அதிர்ஷ்டத்தை அனுபவிக்கும் தயார் நிலையில் இருந்தால் போதும், இன்றோ...... நாளையோ.... என்றோ ஒரு நாள் நாம் அதிர்ஷ்டசாலியாக வலம் வருவோம்.

நாம் அதிர்ஷ்டசாலியாக வலம் வருவதற்கு முதலில் நாம் அதிர்ஷ்டத்தை அனுபவிக்க நினைக்க வேண்டும். அடுத்து அதிர்ஷ்ட போட்டிகளில் பங்கேற்க வேண்டும். பிறகு நாமென்ன அதிர்ஷ்டத்தை அனுபவிப்பது. அதிர்ஷ்டமே தேடிவந்து நம்மை அனுபவிக்கும்..... மகிழவைக்கும்..... பொருளாதார தன்னிறைவு வாழ்வை வாழவைக்கும் .... அடிப்படைத்தேவைகளை.... அத்தியாவசியத் தேவைகளை.... அன்றாடத் தேவைகளை.... வாழ்வியல் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்யும்; இதை அனுபவத்தில் தான் உணரமுடியும்.... அல்லது இதை உணர்ந்து செயல்பட்டால் அனுபவிக்கமுடியும்.

## 25. 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கும் விதங்கள்.

4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பவர்கள் தாம்விரும்பும், தமக்கு அதிர்ஷ்டம் தரும் என்று நம்பும் ஏதோ ஒரு எண் மற்றும் ஒரு சில எண்களைத் தேர்ந்தெடுத்தும் பங்கேற்கிறார்கள்.

தங்கள் வீட்டு எண், இருசக்கர வாகன (மோட்டார் பைக்) எண், நான்கு சக்கர வாகன (காடி) எண், தாங்கள் எதேச்சையாக சந்தித்த எண், தாங்கள் கடைகளில் வாங்கிய பொருட்களின் ரசீது எண், என பலவகைகளிலும் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் தொடர்புடைய எண்களையே அதிர்ஷ்ட எண்ணாகத் தேர்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கிறார்கள்.

மேலும், சிலர், தங்களுக்கு அதிர்ஷ்டம் தரும் பல எண்களைத் தேர்ந்தெடுத்து அவைகளை வீட்டின் பூஜையறைகளிலும். கோவில்களில் சன்னதி முன்பாகவும், கோவில் சன்னதிகளில் தெய்வ விக்ரகங்களின் திருவடி முன்பாகவும் வைத்து... குலுக்கிப்

போட்டு... திருவுளச்சீட்டு முறையில் எடுக்கப்படும் எண்ணை அன்றைய அதிர்ஷ்ட எண்ணாகக் கருதி அன்றைய 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கிறார்கள்.

நாமும் நம்மைப் போன்ற பலரும் மேற்கண்ட வகைகளில் அல்லது அவரவருக்குத் தெரிந்த ஏதோ ஒரு சில வகைகளில் எண்களைத் தேர்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கிறோம்.

எவ்வளவுதான் புத்திசாலித்தனமாக எண்களைத் தேர்ந்தெடுத்தாலும், ஒரு சில நாளில் எந்த எண்ணைத் தேர்ந்தெடுப்பது, எந்த எண்ணைத் தவிர்ப்பது போன்ற தர்மசங்கடமான, குழப்பமான சூழ்நிலைகளையும் நாம் சந்திக்கவேண்டியிருக்கிறது.

ஆமாம்... நாம் குறிப்பிட்ட எண்ணை அதிர்ஷ்ட எண்ணாகத் தேர்ந்தெடுத்து அடுத்தடுத்து வரும் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்போம். ஏதோ ஒருநாள் தொடர்ந்து எடுத்துவந்த எண்ணைத் தவிர்த்து புதிய.... மற்ற எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்டப் போட்டியில் பங்கேற்க வேண்டி வரும். ஆனால், அன்றுதான் நாம் தவிர்த்த எண் 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பரிசுக்குரிய எண்ணாக இடம்பெறும். இப்படிப்பட்ட நேரத்தில் நமது மனநிலை, அதிர்ஷ்டத்தைப் பற்றிய எண்ணம் எப்படியிருக்கும்.?.... எப்படியிருக்கும் என்பதை அவரவர்களின் மனநிலையின் கற்பனைகளுக்கே.... நினைவுகளுக்கே விட்டுவிடுவோம்.

ஒரு எண்ணை, மற்றும் ஒருசில எண்களை மட்டுமே தேர்ந்தெடுத்து தொடர்ந்து, அந்த எண்களையே பயன்படுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கும் போது ஏதோ ஒருமுறை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளும் பரிசுக்குரிய எண்களாக அமையலாம். ஆனால், ஒவ்வொருமுறையும் தொடர்ந்து தேர்தெடுத்து பங்கேற்கும் எண்கள் பரிசுக்குரிய எண்ணாக அமைய வாய்ப்பில்லை.

ஒரு எண்ணை மற்றும் ஒருசில எண்களை மட்டுமே விரும்பி, நம்பி தொடர்ந்து தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதால், மற்றொரு அதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை நாமாகவே தவிர்த்துவிடுகிறோம்.

தொடர்ந்து குறிப்பிட்ட எண்ணையே (எண்களையே)த் தேர்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதால்,

1) மாற்று அதிர்ஷ்ட எண்ணைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்த்துவிடுகிறோம்.
2) தொடர்ந்து தேர்ந்தெடுத்த எண்ணிண் மூலமே Big (பெரியது), Small (சிறியது) 'ஐ' பாக்ஸ் (I Box) விதிமுறைகளில் பங்கேற்கிறோம். இதனால் குறைந்தபட்சம் மும்மடங்குப் பணம் செலுத்தி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்க வேண்டியிருக்கிறது. இதுவும் மாற்று அதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுப்பதற்கே நாம் முயலவில்லை என்பதைக் காட்டுகிறது.

3) நாம்விரும்பிய, அதிர்ஷ்டம் தரும் என நம்பும் ஒரு எண்ணை மற்றும் ஒரு சில எண்களை மட்டும் தேர்ந்தெடுத்து Big (பெரியது)…. Small (சிறியது)…. ஐபாக்ஸ் (I Box) ஆகிய மூன்று முறைகளிலும் பங்கேற்பதற்குப் பதிலாக ஒரு எண்ணை Big (பெரியது) விதிமுறையிலும்; மற்றொரு எண்ணை Small (சிறியது) விதிமுறையிலும்; மற்றுமொரு எண்ணை ஐபாக்ஸ் (I Box)…. விதிமுறையிலும் பங்கேற்றால், ஏதோ ஒரு எண்ணாவது, அதிர்ஷ்ட பரிசுக்குரிய எண்ணாக அமைந்து, நமது பங்கேற்புத் தொகையை மீட்டுத்தரவாய்ப்பிருக்கிறது.
4) நாம் விரும்பிய, அதிர்ஷ்டம் தரும் என நம்பும் ஒரு எண்ணை மற்றும் ஒருசில எண்களை மட்டும் தேர்ந்தெடுத்து அனைத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டு போட்டி நிறுனங்களிலும் பங்கேற்புக்கட்டணம் செலுத்துவது இத்தகைய பங்கேற்பு முறைகளாலும் பல மடங்கு போட்டிகட்டண பணம் நஷ்டமாகிறது. மேலும், புதிய… மாற்று அதிர்ஷ்ட எண்களை தேர்ந்தெடுக்காமல் துரதிர்ஷ்ட சாலியாக்கிவிடுகிறது.

நீங்கள் கேட்கலாம், ஒரு எண்ணிலேயே Big , Small, I Box முறைகளில் போட்டியிட்டால், அந்த எண், பரிசுக்குரிய எண்ணாக அமைந்தால் மூன்று வழிகளிலும் பணம் கிடைக்குமேயென்று. ஆமாம்… கிடைக்கும் தான்… அந்த எண் பரிசுக்குரிய எண்ணாக அமைந்தால் தான் மூன்று வழிகளிலும் பணம் கிடைக்கும். மாறாக, பரிசுக்குரிய எண்ணாக அமையாவிட்டால் மும்மடங்குப்பங்கேற்றப்பணமும் நஷ்டமாகிறதல்லவா? இதற்கு மாற்று அதிர்ஷ்ட எண்களையும் தேர்ந்தெடுது பல எண்களுடன் பங்கேற்றிருந்தால், அந்த மாற்று எண்கள், பரிசுக்குரிய எண்களாக அமைந்தால் நமக்கு லாபமல்லவா? மாற்று எண்கள் பரிசுக்குரிய எண்ணாக அமையும் என்பதற்கு என்னால் மட்டுமல்ல யாராலும் உத்திரவாதம் தரமுடியாதுதான்.

பலவித பங்கேற்பு விதிமுறைகள் இருப்பதால், இந்த விதிமுறைகளும், பங்கேற்பாளர்களுக்கு சாதகமாகயிருப்பதால் இவ்விதிமுறைகளைப் பின்பற்றலாமல்லவா?

எண்களைக் கணித்து…. அனுமானித்து… தேர்ந்தெடுத்து 4Dஅதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்பதுதான் நமத கடமை…. பொறுப்பு. அந்தஎண்ணை பரிசுக்குரிய எண்ணாக அறிவிப்பது அதிர்ஷ்ட தேவதையின் கருணை…. விருப்பு.

## 26. 4Dஅதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுக்கும் விதங்கள்

1) வீட்டு எண், இருசக்கர வாகன (மோட்டார்பைக்) எண், நான்குசக்கர வாகன (காடி) எண், லோரி எண்

2) பிறந்த தேதியில் உள்ள பிறவி எண், விதி எண், தேதி எண், மாத எண், வருட எண்.
3) பெயர் எண், பெயரின் ஆங்கில எழுத்து வடிவங்களுக்குரிய எண்மதிப்புகளை சுழற்சிமுறை… மற்றும் சுருக்கமுறைகளுக்கு உட்படுத்தி 4D அதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுக்கலாம்.
4) பிறந்த ஜாதக கட்டத்தில் லாபம், அதிர்ஷ்டம், யோகத்தைத் தரக்கூடிய அமைப்புகளில் உள்ள கிரகங்களுக்குரிய எண் மதிப்புகள்.
5) பிறந்த ஜாதக கட்டத்தில் கிரகங்கள் இணைந்திருப்பதன் மூலமும், பார்வைகளின் மூலமும், கிரகங்கள் வீற்றிருக்கும் வீட்டின் பலாபலன்களைப் பொறுத்தும், அந்தந்த கிரகங்களுக்குரிய எண் மதிப்புகளை தேர்ந்தெடுப்பது.
6) ஜாதகப்படி நடைமுறையில் உள்ள
   1) தசா நாதனுக்குரிய எண்மதிப்பு,
   2) புத்தி நாதனுக்குரிய எண்மதிப்பு,
   3) அந்தர நாதனுக்குரிய எண்மதிப்பு,
   4) அன்றைய கிழமைக்குரிய கிரகநாதனின் எண்மதிப்பு,

இப்படியாக வரும் நான்கு இலக்கங்களையும் கொண்ட எண்ணை அதிர்ஷ்ட எண்ணாக நம்பி, விரும்பி 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.

7) அதிர்ஷ்டங்களைத்தரும் நான்கெழுத்து ஆங்கிலவார்த்தை வடிவங்களுக்குரிய எண்மதிப்புகளைத் தேர்ந்தெடுப்பது. (நான்கெழுத்துக்கும் கூடுதலான எழுத்துக்கள் உடைய ஆங்கில வார்த்தைகளாக இருந்தாலும், அவற்றின் எண்மதிப்புகளை சுழற்சிமுறை மற்றும் சுருக்கமுறைகளுக்கு உட்படுத்தி 4Dஅதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுக்கலாம்).
8) நம்முடையப் பார்வையில் எதேச்சையாக, அடிக்கடித் தென்படக்கூடிய எண்கள், நமது அன்றாட நிகழ்வில் சந்திக்கக்கூடிய எண்களைத்தேர்ந்தெடுப்பது.
9) அவரவர் வீட்டு தொலைபேசி எண், கைத்தொலைபேசி எண், அலுவலக தொலைபேசி எண்களை சுழற்சிமுறையில், மற்றும் சுருக்கமுறையில் 4Dஎண்களாக மாற்றி பங்கேற்பது.
10) பிறப்புச் சான்றிதழ்…. குடும்பஅட்டை…. வாக்காளர் அடையாளஅட்டை… ஓட்டுநர்உரிமம்….. அனைத்துலக கடப்பிதழ் (பாஸ் போர்ட்)….. கல்விச் சான்றிதழ்கள்…. கேளரவ… பரிசு…. சிறப்புச்சான்றிதழ்கள் முதலானவைகளில் உள்ள எண்களைத் தேர்ந்தெடுத்து (நேர், 1i,4i,6i,12i,24i, சுழற்சிமுறை மற்றும் சுருக்க முறைகளுக்கு உட்படுத்தி) பங்கேற்பது.

11) தாங்கள் கடைகளில் வாங்கிய பொருட்களின் இரசீது எண்.
12) இந்தப்புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ள எண்களை தொடுகுறி அதிர்ஷ்டஎண் முறையில் தேர்ந்தெடுத்து பங்கேற்பது.

மேற்கண்ட வகைகளிலும், மேலும் அவரவர்கள் தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கும் முறைகளிலும் 4D எண்களைத் தேர்ந்தெடுத்து 4D அதிர்ஷ்ட விளையாட்டில் பங்கேற்கலாம்.